Regd. No. M. 5277. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

8 பக்கங்கள் | வாரப்பதிப்பு | விலை ஒரு அணா

வெடி 1.] சென்னை, சனிக்கிழமை (8-1-1949) [குண்டு 14

முன்னேறும் திராவிடத்தின் முட்டுக்கட்டைகள்

எஸ். என். விவேகன்

கோடிக்கணக்கான திராவிட உழைப்பாளிகளின் ரத்தத்தை உறிஞ்சி, அவர்களின் வியர்வையிலேயே குளித்து, அவ்வுழைப்பாளியின் எலும்புக்கூடுகளால் கட்டப்பட்ட மாடமாளிகையிலே வசித்து இன்னமும் மேனி மெருகு கெடாது வாழ்ந்து வரும் ஆரியக் குள்ள நரிக்கூட்டத்தை அழித்தொழிக்க, அல்லும் பகலும் அரும்பாடு பட்டு வருவது நம் திராவிடக்கழகம்,

காலையிலிருந்து மாலைவரை இயந்திரத்தோடு இயந்திரமாய், எலும்பு நுறுங்கப் பாடுபட்டு, போதிய பலனைக் காணாது, வெளியேவந்து பஞ்சடைந்த, குழிவிழுந்த கண்களோடு, தன்குடிசை நோக்கித் தள்ளாடி நடந்து சென்று, "கூழுக்கு உப்பில்லையே" என்று அவ்வேழைகள் கூக்குரலிடும்போது, அவ்வேளையிலே, இன்பவல்லியின் இடையிலே தனது இடதுகரம் இருக்க, தனது இருசெவிகளும் இன்னிசை கேட்க, தனது மதியையும், மனதையும், மதுவிலே செலுத்தி மமதையால் மெய்மறந்து கிடக்கும், பணக்கார முதலாளி வர்க்கத்திற்கு சாவுமணியடிப்பது நம் திராவிடக்கழகம்.

மடமூண்டு இந்நாட்டிலே எய்த்துப்பிழைப்போம் என்றெண்ணிடும், மாடாதிபதிகள் மங்கையும் மதுக்கோப்பையுமே இன்பமெனக்கொண்டு ஆடலழகிகளின் அதரங்களையே சுவைத்து இதுவே இன்பமென நினைத்து மெய்மறந்து கிடக்கும் மாமிச பர்வதங்களாகிய மடாதிபதிகள், கமண்டலமேந்திகள், கொட்டை கட்டிகள், காவி உடை அணிந்தோர், திருநாமதாரிகள், இன்னும் இதுபோன்ற எத்தனையோ பிற்போக்காளர்களுக்கு ஒரேயடியாக சாவோலை நீட்டுவது நம் திராவிடக்கழகம்.

அறியாமைக்கும் ஆரியம்புகுத்திய காட்டுமிராண்டித் தனத்திற்கும், அதருநிக்கத்திற்கும், குழிதோண்டி புதையுங்கள் என்று கூறும் நம் திராவிடக் கழகத்தை, எடுதாங்கிகள், எடுபிடியாட்கள், துடியிடையாளின் உடலழகை வர்ணித்துப் பிழைப்பவர்கள், தானும் பேசாமல் தன்சிஷ்ய கோடிகளையும் பேசச்சொல்லாமல், மௌனத்தின் சாயலிலே உலக மக்களை மயக்கி. அவர்களின் உழைப்பைத் தங்களின் உல்லாச வாழ்விற்கு. உரமாக அமைத்துக்கொண்டு, நாட்டிலே பிச்சைக்காரர்களை ஏராளமாக உண்டாக்கி விட்டு, தாங்கள் மட்டும் வாழ வழி வகுத்துக் கொண்டு, உயர்வாழ்வு வாழும், மடாதிபதிகளையும், ரமணர்களையும், அரவிந்தர்களையும் மதவாதிகளையும் கண்டு மயங்காதீர்கள் மருட்சியடையாதீர்கள் என்று வீர உரையாற்றுவது நம் திராவிடக்கழகம்.

காயும் கதிரோன் எழுமுன்னே விண்மீன்கள் கண்சிமிட்டி விளையாடும் வேளையிலே கண்கசக்கி தான் கசக்கிய திரியாத கந்தையிடையிலேதுவள கொட்டும் பனியை தாங்க உடலிலே வேறு துணியின்றி, தோளிலே தொங்கும் கலப்பை உடலோடு சேர்த்து கீழே அமுக்க எலும்புயர்ந்து கூனிக் குறுகிக் கிடக்கும் முதுகிலே நீர் இறைக்கும் சால் அமுக்க, எண்ணை காணாத பரட்டைதலையோடு, குழி விழுந்த கண்களோடு வறண்டநாவோடு, வற்றிய உடலோடு, எலும்புக்கூடுகளான காளைமாடுகளின் கயிற்றைகையிலே தொங்க, அம்மாடுகள் பச்சை பசேலென்று, இருபுறமும் இருக்கும் மணிக் கதிர்களை கண்டு இருபுறமும் இழுக்க, அதனை இழுத்துப் பிடிக்கவும் பலமில்லாமல் தள்ளாடி நடந்து செல்லும் விவசாயி

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்று ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒரு மடையன் எழுதிவைத்து விட்டுச் சென்றானே என்று தன் தொழிலை உயர்த்திக்கூறிய அறிஞரை சிந்தித்து கொண்டே நடைப் பிணமாய்

ஐயையோ மாட்டவே மாட்டேன்!

என்ன ? தூத்துக்குடிக்கா ? அப்பப்பா நான் மாண்டேன். தூத்துக்குடியும் தமிழ் நாட்டின் ஒரு பாகம்தானே? சென்னைக்குப் போய் விட்டு வந்ததே இன்னும் ! கண்ணை மூட முடியாமலிருக்கிறது. மூடினால் ஒரே கனு. வ. உ. சி. கப்பல் யாரால் வது மிதக்கவிடப்படட்டும் நான் மாட்டவே மாட்டேன். அந்தப் பையன்கள்...... ?

☞ "உடுமலை பீரங்கி" ஹிக்கின்பாதம்ஸ் ரெயில்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

மென நடந்து செல்லும் ஏழை விவசாயி மக்களை வாழ்விக்க வந்தது நம் திராவிடக்கழகம்.

நெசவாலையிலே புகுந்து ஓய்வின்றி உருமாறும்வரை, உழைத்து மாற்றாரின் மனைவி மக்கள் மானங் காக்க அழகிய ஆடைகளை நெய்து வாரி வாரி கொடுத்துவிட்டு தன் மனைவி மக்கள் மெய்யிலே கைகளை பொத்தி ஒரு பகுதியை உடுத்திக்கொண்டு மறு பகுதியை துவைத் துலர்த்தும் கேவல நிலையிலே வாழ்க்கை நடத்தும் நெசவு தொழிலாளி.

செய்யும் தொழிலே சீர்தூக்கிப் பார்க்குங்கால் செய்யும் தொழிலிற்கு நிகரில்லை கண்டீர்.

என்று கூறிய அறிஞரை தூற்றிக் கொண்டு எழ்மை வாழ்க்கை நடத்தும் தறித் தொழிலாளிகளின் வாழ்க்கையை வளமாக்க வந்தது நம் திராவிடக் கழகம்.

பணத்தை வாரிக்கொட்டிப் படித்துவிட்டு பாரிகளாய் வாழ்வோர்க்கு (எழுத்தறிவித்தவன் இறைவனாகும்) என்பது அலங்கார வார்த்தை என்று எண்ணிக்கண்ணீர்விடும் ஆசிரியர்களின் கண்ணீரைத் துடைக்க வந்தது நம் திராவிடக் கழகம்.

ஆம் திராவிடக் கழகம். திராவிட நாட்டிலே தோன்றி, திராவிட மக்களை வாழ்விக்க வந்தது திராவிடக் கழகம்.

நம்முடைய நாடு, திராவிடநாடு மூவேந்தர்கள் ஆண்டநாடு பொன்னும் மணியும் நிறைந்தநாடு ஆற்றலை மதியா மன்னர்களை அடக்கி அவர்கள் தலையிலே அருங்கல்லைக் கொண்டு வந்த சேரன் வழிவந்தநாடு அறியாமைக்கு அடைக்கலம் புகாதநாடு, மானத்தை பெரிதென மதித்து தன் ஆற்றலை போற்றாது இகழ்ந்துரைப்பவர் எவராயின் உளராயின் அவரை யானை காலில் அகப்பட்ட முளை போல போன்றச் செய்த புலிநிகர் வீரன் சோழன் நலங்கிள்ளி வழிவந்தநாடு செங்கோன்மை வழுவாது அரசோச்சிய மாங்குடி மருதன் தலைவனும் பலர் புகழ் நிலவரையுடைய தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வழிவந்தநாடு, அரசராயினும் அஞ்சாது பேசும் திறமுடைய அரசர் போற்ற வாழ்ந்த அரிவை காக்கைப் பாடினியார் வழிவந்தநாடு, தன்கணவன் பகைவரோடு பொருது உயிர் துறந்தார் என்று கேள்விப்பட்டும் உடன் பிறந்தவனும் எதிரியின் வாளுக்கு இறையாகியபின் தன்மகனை அழைத்து தலைக்கு எண்ணை தடவி வாரிவிட்டு வீட்டிலிருந்த ஒரு ஈட்டியை எடுத்துவந்து அவனிடம் கொடுத்து "போருக்குப் போய்வா" என்று அனுப்பிய வீரப்பெண்மணிகள் வழிவந்தநாடு கழனிகளும் காடுகளும் நெல்லும் மணியும் தங்கவயல்களும் இரும்புச் சுரங்கங்களும் முத்துக்களும் மாணிக்கங்களும் மிகுந்தது நம்திராவிட நாடு.

இப்படிப்பட்ட நம் ஒப்பற்றநாடு ஆரியத்தினால் அலக் கழிக்கப்பட்டு விட்டது வர்ணாசிரம பேதங்களினால் வழுக்கி விழுந்து விட்டது தர்ப்பைப் புல்லின் உதவியால் தகர்த் தெரியப் பட்டு விட்டது என்றெல்லாம் கூறினோம் கூறுகிறோம், ஆயினும் இந்நாட்டு மக்கள் எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்து யாருக்காகவோ பாடுபட்ட உத்தமர்களை அறிவார்கள், கண்காணாத நாட்டிலே தோன்றிய காரல் மார்சை புகழ்வார்கள். என்றோமாண்டு மடிந்துவிட்ட ரூசோவை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறுவார்கள். நம் நாட்டிற்கொரு சாக்ரடீஸ் தேவை நம் நாட்டிற்கொரு கமால்பாஷா தேவை, நம்நாட்டிற்கொரு கரிபால்டி தேவை நம் நாட்டிற்கொரு மாஜினிதேவை அவர்களெல்லாம் இல்லையே என்று எங்கெங்கோ மூலை முடுக்கு கலெல்லாம் சென்று கோ. வென்று கதறியழுவார்கள்.

ஆனால் இந்நாட்டுலெனினை திராவிடத்தின் தந்தையை எழுச்சியின் வித்தை வாழ்வின் வழிகாட்டியை அறியாமையின் சம்மட்டியை புரட்சியின் சின்னத்தை பகுத்தறிவுப் பகலவனை ஆம் பெரியார் ஈ. வெ. ராவை அறிய மாட்டார்கள். அவரது உயர்ந்தஉள்ளத்தின் பிரதி பலிப்பாகிய திராவிடக் கழகம் இந்நாட்டிற்கும் இந்நாட்டு மக்களுக்கும் செய்திருக்கும் தொண்டின் பலனை சிந்தித்து அறியமாட்டார்கள்.

1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கம் (திராவிடர்கழகம்) பெரியார் ஈ. வெ. ராமசாமியவர்களால் துவக்கப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை இருபத்துமூன்று வருடங்களாய் கூறுகிறோம் ஆனித்தரமான தக்க ஆதாரங்களோடு சரித்திர எடுகளை புரட்டிக் காட்டியும் அறிஞர்களின் அபிப்பிராயங்களையும் தொகுத்தும் கூறுகிறோம் நம்முடையநாடு திராவிடநாடு நம்முடைய மொழி திராவிடமொழி நம்முடையகலை திராவிடக்கலை நம்முடைய நாகரீகம் திராவிட நாகரீகம் என்று எத்தனை மக்கள் இதனை ஏற்றுக்கொண்டனர்? எத்தனை மக்கள் இன உணர்ச்சியின் கீழ் ஒன்று பட்டனர்? எத்தனை மக்கள் நாம் கூறியவைகளை சிந்தித்து முடிவு கண்டனர்?

அதிகாரவர்க்கத்தின் அணைப்பிற்கு ஏங்கித் தவம் கிடக்கும் எத்தர்கள் சிந்திக்க வேண்டாம்.

புரோகிதனின்புன்சிரிப்பிற்கும், ருத்ராட்சத்தின் என்னிக்கையிலே தம் வாழ்வுப் பாதையை வகுத்துக்கொள்ளும் வக்கிகங்கள் சிந்திக்க வேண்டாம்.

பல்லிழித்துப் பார்பனீயத்தின் பாதந்தாங்கிகள் சிந்திக்க வேண்டாம்.

படித்தறியாப் பாமரர்கள் சிந்திக்க வேண்டாம்.

ஆனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே சூரியனே அஸ்தமிக்காது என்று மற்ற நாட்டினர் பெருமிதத்தோடு தன்னை கூற வேண்டும் என்று எண்ணிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆசையிலே மண்ணடி அரசியல் வீரர்கள் சிந்திக்க வேண்டாமா?

ஏகாதிபத்திய வெறியர்களான டயரின் பரம்பரைக்கும் பலே சவக்குழியிலே புதைத்து அதன் மேல் நினைவுச் சின்னம் நாட்டிய காங்கிரஸ் தோழர்கள் சித்திக்க வேண்டாமா?

கல்கத்தா இருட்டறை சம்பவங்களை காரனம் காட்டி, மீர்ஜாபரை மிரட்டி ஓமிச்சந்தை எய்த்து ராபர்ட் க்ளைவ் காட்டிய ஆங்கிலேயக் கோட்டையை தூள் தூளாக மண்ணோடு மண்ணாய் இடித்துத் தள்ளி புரட்சி வீரர்கள் சிந்திக்க வேண்டாமா?

அமெரிக்க நாட்டிலே வாஷிங்டனால் வெளியேற்றப்பட்ட போதும் ஒழிக்கப் படாத ஆங்கிலேயத்தை!

ஸ்காட்லாண்டிலே ராபர்ட் பூரூசினால் வெளியேற்றப்பட்ட போதும் ஒழிக்கப்படாத ஆங்கிலேயத்தை!!

எகிப்த்து நாட்டிலே ஜாக்லுல் பாஷாவினால் வெளியேற்றப்பட்டபோதும் ஒழிக்கப்படாத ஆங்கிலேயத்தை!!!

இந்நாட்டிலே ஏழை இந்தியாவிலே மகாத்மாவின் ஆத்ம சக்தி ஒன்றையே துணையாகக் கொண்டு அஹிம்சா போர் புரிந்து ஆங்கிலேயத்தை அழித்து விட்டோம் என்று மேடை அதிர கர்ஜனை புரியும் தேசிய திராவிடத் தோழர்கள் சிந்திக்க வேண்டாமா?

இந்நாட்டின் செல்வர்களாகிய தொழிலாளர்கள் சிந்திக்க வேண்டாமா? சிந்திக்காவிட்டாலும் போகிறது சிந்தனைக்கும் செயலுக்கும் வேலை தரும் நம்மை தூற்றுமலாவது இருக்க வேண்டாமா?

"போரிடு அல்லது சாவு" என்ற புது மொழியை மனதிலே எண்ணி லட்சியத்தை நினைத்து தரணிதனில் பரணி பாடிச் செல்லும் நமக்கு மேலும் மேலும் தடைகளை கொண்டுவந்து கிரப்பாமலாவது இருக்க வெண்டாமா?

நம்மோடு அவர்கள் ஒத்துழைக்க வேண்டாம்! ஒன்றுபட வேண்டாம்!! ஆனால் நமது உற்சாக உள்ளத்தை ஒடித்த உள்ளமாக மாற்றுமலாவது இருக்க வேண்டாமா?

ஒருவருக்கு நன்மை செய்யாவிட்டாலும். தீமையாவது செய்யாமலிருக்க கூடாதா?

இன்று நமது இயக்கமாகிய திராவிடக் கழகம் ஒரளவுக்காவது" சிறிதளவாவது எதிர்ப்புச் சக்திகளை சமாளிக்கும் அளவிற்கு சமுதாய சீர்திருத்த தொண்டானது நாட்டு மக்களின் மனப்போக்கை மாற்றியிருக்கிறது. எனவே இனி நாம் நமதியக்கக்குரையை அரசியல் மன்றத்தை நோக்கிக் கனவேகமாகத் தட்டிவிடவேண்டும் பேசிவிட்டு வந்த ஊருக்கே திரும்பத் திரும்பப் போய் பேசியதையே திரும்பத் திரும்பப் பேசுவதால் எவ்விதப் பயனும் ஏற்படாது.

சகோதரத்துவத்தைப் பரப்புவதையே அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தல் முஸ்லீம்களுக்கும் சேர்த்து இந்நாட்டுத் திராவிடக் கழகம் உழைக்கும் போது இந்நாட்டுக்குத் தனியான "முஸ்லிம் லீக்" தேவையில்லை ஆகவே முஸ்லீம்கள் உடனே தங்களின் லீக்கை கலைத்துவிட வேண்டும் இல்லையேல் முன்னேறும் திராவிடத்துக்கு இது ஒரு முட்டுக் கட்டை தான்.

திராவிட நாட்டுப் பிரிவினையிலே தமிழ் நாட்டுப் பிரிவினையும் அடங்கியிருப்பதால் அதோடு தமிழரசுக் கட்சியே இருக்கும் திட்டங்களை காட்டிலும் மிகவும் முற்போக்கான திட்டங்கள் திராவிடக் கழகத்திலே இருப்பதாலும் இந்நாட்டிற்குத் தனியான தமிழர் கட்சியோ, தமிழரசுக் கட்சியோ தேவையில்லை ஆகவே இந்தக் கட்சியில் நிர்வாகஸ்தரும் தங்களுடைய கட்சியை உடனடியாகக் கலைத்துவிட வேண்டும் இல்லையேல் முன்னேறும் திராவிடத்திற்கு இது ஒரு முட்டுக் கட்டை தான்.

தாழ்த்தப்பட்டோர்களை தனியாகப் பிரிக்காமல் தன்னுடனே ஐக்கியப் படுத்திக் கொண்டு அவர்களுக்குமாகச் சேர்ந்து திராவிடக் கழகம் தொண்டாற்றும் போது ஒரு சில சுயநலமிகளால் ஏற்படுத்தப்பட்ட ஷெட்யூல்டு காஸ்ட் (பெடரேஷன்) தேவையில்லை ஆகையால் ஆதிதிராவிடத் தோழர்களும் தங்கள் பெடரேஷனை உடனடியாகக் கலைத்துவிடவேண்டும் இல்லையேல் முன்னேறும் திராவிடத்திற்கு இதுவும் ஒரு முட்டுக் கட்டைதான்.

ஆகவே நாமனைவரும் ஐக்யமனோபாவத்தோடு ஒன்றுபட வேண்டும்.

பொதுவுடமைக் கொள்கை திசை
யெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை யெங்களுயிரெனக்
காப்போம்

என்று திராவிடக் கழகமானது சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் நாட்டிலே பொதுவுடமை கொள்கையை முறசரைந்து கொண்டு வரும் போது இந்நாட்டிற்குத் தனியாக ரமன ரிஷிகளையும் சங்கராச்சாரிகளையும் தொண்டாற்ற அழைக்கும் சோசலிஸ்ட் கட்சியோ சர்மாக்களும் சாஸ்த்திரிகளும் அடிவருடும் கம்யூனிஸ்ட் கட்சியோ தேவையில்லை எனவேயிவைகளும் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும் இல்லையேல் முன்னேறும் திராவிடத்திற்கு இதுவும்ஒரு முட்டுக் கட்டைதான்.

கார்ப்பொ ரேஷனில்

அவசரத்தீர்மானங்கள்

மரமேறிகளுக்குக் கோவிந்தா.

முதல் பிரேரணைதோழர் சிவஞான கிராமணியாரால் கொண்டு வரப்பட்டது. அது பின் வருமாறு;– 'நகரிலுள்ள மாஜி மரமேறிகளுக்கு நிவாரணமளிப்பது அவசியமாதலால் மேயர் ஆரம்பித்துள்ளநிவாரண நிதிக்கு கார்ப்பொரேஷன் நிதியிலிருந்து ரூ 20000 ஒதுக்க வேண்டும்.

தோழர் ஜீவரத்தினம் கொண்டு வந்த தீர்மானம்;–

நகரிலுள்ள 8000 மாஜி மரமேறிகளிடையே விநியோகிக்க கார்ப்பொரேஷன் ரூ 24000 ஒதுக்க வேண்டும்.

ஜனாப் ஏ. எம். பிஜிபுரி கொண்டு வந்த தீர்மானம்;– மாஜி மரமேறிகளுக்கு உத்யோகமளிக்க சர்க்கார் தன்னாலியன்றதை செய்ய வேண்டுமென்று இச்சபை கேட்டுக்கொள்கிறது.

3-வது தீர்மானம் ஏற்கெனவேயே தோழர் பார்த்தசாரதி நாயக்கரால் பிரரேபிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தைப் போலவே இருப்பதால் அதை மேயர் நிராகரித்தார்.

ஐரோப்பியர்களின் மாஜி வேலைக்காரர்கள் 6000 பேர்களுக்கதிகமாக நகரிலிருப்பதாகவும் அவர்களுக்கு நிவாரணமளிக்க மேயர் ஒரு நிதி ஆரம்பிக்க வேண்டுமென்றும் இந்நிதிக்கு கார்ப்பொரேஷன் ரூ 2000, நன்கொடை அளிக்க வேண்டும் என்றும் தோழர் கே. எம். நாதமுனி ஒரு பிரரேரணை கொண்டு வந்தார்.

சர்க்கார் உத்தரவு.

இத்தீர்மானங்கள் சம்பந்தமாக மேயர் 1936ம் வருஷம் சர்க்கார் பிறப்பித்தஉத்தரவை படித்துக்காட்டினார் தனிமனிதர்களுக்கு நிவாரணமளிப்பது தனிப்பட்டவர்களின் தர்ம காரியமென்னும் ஸ்தல ஸ்தாபனங்களின் நிதியை ஒதுக்குவது சரியல்ல என்றும். எதிர்காலத்தில் இம்மாதிரி செலவுகளுக்கு சர்க்கார் சாங்கிஷன் அளிக்க முடியாதென்றும், எனினும் பெரிய சம்பவங்கள் ஏற்பட்டால், அதற்காக சரியான முறையில் ஏற்படுத்தப்படும் நிதிகளுக்கு நன்கொடையளிப்பதை சர்க்கார் கவனிப்பார் என்றும் அவ்வுத்தரவில் கூறப்பட்டுள்ளது.

தோழர் சிவஞான கிராமனியின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது சாதகமாக 17 பேரும் பாதகமாக 20 பேரும் ஓட்டளித்தனர் தீர்மானம் தோற்றது.

தோழர் ஜீவரத்னத்தின் தீர்மானம் முக்கால்வாசி மெம்பர்களின் ஆதரவு பெருத காரணத்தால் தோற்றது.

தோழர் நாதமுனியின் தீர்மானமும்தோற்றது.

—:✿:—

சென்னைகார்ப்பொரேஷன்

சென்னை கார்பொரேஷன் தண்ணீர் சப்ளை சாக்கடை திட்டங்களுக்காகச் சர்க்கார் ரூ 13013.00 கடன் கொடுக்க பட்ஜட்டில் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

எல்லா இயக்கங்களையும் கலைத்து விட்டு பிறப்பால், பன்பால், நடையுடை பாவனைகளால். சிந்தனையால், செயலால், ஒன்றுபட்ட திராவிட மக்களனைவரும் வானிடை பறக்கும் கறுங் கொடியின் கீழ் அணிவகுத்து நிற்க்க வேண்டும் தங்களின் ஏகோபித்த குரலை எழுப்பி பொதுஜன சக்தியை ஒன்று திரட்ட வேண்டும் பெரியாரின் தலைமையின் கீழ் அவர் காட்டிய வழியே சென்று நம் குறிக்கோளை அடைவோம்.

வாழ்க நம் வளமார் திராவிட நாடு!
வாழ்க நம் திராவிடத் தந்தை பெரியார்!
வெல்க அவரது எண்ணம்!!!

சிறுத்தையே! சிறையைவிட்டு வெளியேவா!

—து. கணேசன்—

பழமையான மூடப்பழக்க வழக்கத்தில் பாழ்பட்ட நெஞ்சமே! பகுத்தறிவு வேண்டாமா உனக்கு? ஆடவன் மட்டும் ஆண்டவன் முன்னிலையில் ஆயிரம் கன்னிப்பெண்களை அழிக்கலாம் பெண் ஒருவனை இழந்தால் உலக இன்பத்தினின்று ஒதுக்கப்பட்டவள் என்று நெஞ்சில் உரமின்றி, நேர்மையில் திறமின்றி கூறுவதுதான் மனுதர்ம நீதி சட்டமா!

பாட்டால் புரட்சிதந்து, பகுத்தறிவால் பழமையை நீக்கி பண்பை உணர்த்திய பாவலர் பாரதிதாசன் பிறந்த மண்ணிலா, மகளிர்க்கு உரிமை இல்லை கைமீது தலைசாய்த்து கதரும் பெண்கள் மலிந்த நம்நாட்டில் கண்ணபிரானுக்கு உற்சவம் செய்வதில் உணர்ச்சி எழுகின்றதே தவிர எழில் மாதர் ஏங்குவதைக்கண்டு இரக்கம் கொள்ளவில்லையே!

பாவம். பூ அணியாக்கோலம். காய்ந்து கனத்த கன்னம். சிரித்து விளையாட வேண்டிய சிறுவயதில் அழுத கண்ணீரோடும் சிந்திய மூக்கோடும் கண்ணீரும் கம்பலையுமாக நிற்பதைக்கண்டு மன வேதனைப்படாத சமூகமே! மங்கையின் மாசு மருவற்ற கீர்த்தி மங்கி மறைந்ததே! நம்பிக்கை தளர்ந்து நாசமடியும் நிலைமை ஏற்பட்டதின் காரணம்யாது என்பதை கூர்ந்து அறிவுக்கண்கொண்டு ஆராய்ச்சி செய்கின்ற காலையில் வெளிப்படுகின்றது வேடதாரிகளின் வெளிவேஷம், அந்நியர் படைஎடுத்து அடிவைக்க அலறிய நமது மறநாட்டிலே ஆசியா நாடுகளில் ஆடுமாடுகளை மேய்த்து திரிந்த ஆரிய இனத்தவர்களின் வருகையால் நமது நாகரீகம் நாயினும் கேடாய் மாறிவிட்டதே, மானமே பெரிதென வாழ்ந்த தமிழர் மானத்தை விலைக்கு விற்கும் விற்பன்னராய் மாறி விட்டனரே. உயிரினும் சிறந்த உரிமை எங்கேயோ ஓடி ஒழிந்து விட்டதே ஆரிய அநாகரீகச்சேற்றில் ஆழம் தெரியாமல் காலைவிட்ட நயமைத்தன்மையால் அறியாமை இருளிலே சிக்கி சீரழியும் சமூகத்திற்கு எழுச்சி ஊட்டவேண்டாமா!

மக்கி மடிந்த மகளிர் கூட்டம் மலர்ந்து மணம் வீச வேண்டுமானால் பகைமையை ஊட்டி படுகுழியில் ஆழ்த்தும் பாதகர்களின் சடங்கை முதலில் விட்டு ஒழிக்க வேண்டும், பெண்ணை பேதை என்னும் பிழை மதி நீங்க வேண்டும். கண்ணீரை புகைக்கும் நெருப்பும், காதை துளைக்கும் மந்திரமும், கண்மூடித்தனமான கபோதிச்சடங்குகளுக்கும் சாவு மணி அடிக்க வேண்டாமா! கல்வி கரைபுரண்டு ஓடும் இக்காலத்திலா மனம் பொருந்தா மணங்களை விதியின் பொருட்டால் விதவைகளை பெருக்கி விலாகோகநகைக்கும் மானங்கெட்ட சமூகமே! மதி என்பதே! உனக்கு இல்லையா! மதி என்னும் நீதியைபெற பொறிபறக்கும் கண்களோடு. புறமுதுகு காட்டா வீரத்தோடு இருண்ட உலகினிலே தோன்றிஒளிவிட்டுக்கொண்டிருக்கும் ஒப்பற்ற நட்சத்திரம் திராவிடத் தந்தை பெரியாரின் பேருரை உன் சிந்தனையைக் கிளரவில்லையா! அவரது நரைத்த தாடி இளைத்த உடல் களைத்த விழி ஆகிய இவைகளை காணும் போதே குலை நடுங்குகின்றதே.

கடுகளவும் தீங்கின்றி பீடுஉடைய அறத்தோடு போர் உரிமை செய்வது யாருக்காக என்பதையாவது சிந்தித்துப்பார்த்தாயா! செத்தாருக்கு மாரடிக்கும் உலகமெ, சிதைந்த வாழ்வினருக்கு சிறப்பெங்கே? விண்உயர்ந்த மதிலினிலே வீரச்சமர் புரிந்த கன்னி தமிழனே, பல் இளிக்கும் கும்பலும், பதவிப்பித்தரும், பண மூட்டைகளும், சுயநலச்சொரூபிகளும் உனது எழிலை குறைக்க குதர்க்கம் தீட்டுவது உனக்கு தெரியவில்லையா? கொடுங்கோன்மையினின்று விடுபட்டால் ஒழிய சமதர்மம் அரும்புவது இயலாது.

இடிந்த கூரை சரிந்த சுவர்களிலே வசதியற்ற வாழ்க்கையிலே உழலும் மக்களுககு, அஞ்சா நெஞ்சத்தோடு அரசியலாரை அதட்டிக்கேட்கும் ஆண்மையாளருக்கு ஆதரவு தர நினைப்பது பெரிதல்ல. அரும்படர்த்தி அடர்தநாடு. கண்ணைக்கவரும் பொன்வயல் பொதிந்தநாடு' சந்திரகுப்த மௌளிய ஆட்சிமுதல் அடிமைப்படாதநாடு உண்மைகளை ஆராய்ந்து ஊழல்களை வெளிப்படுத்தி உரிமைக்கு போராடவேண்டும்.

செந்தமிழில் செத்த மொழி ஏன்? என்று உள்ளதைச்சொன்னால் தொல்லையா, பறிபோகும் எங்கள் உரிமையைக்கேட்டால் சிறையா? சிறை எங்களை என்ன செய்யும். சிந்தனையைத் தூண்டி விடுமேயன்றி சிதைந்துவிடாது,

நமது இலட்சிய முழக்கத்தை அடக்க கருதுவனக் கண்டு கண்ணீர் விடுவதா. கதருவதா என்று தெரியவில்லையே! மக்களின் உள்ளத்தில் ஊறிப்போயிருக்கும் பிரிவினை உணர்ச்சி இறவாவரம் பெற்று விட்டது. கிருஷ்ணமாச்சாரியின் உள்ளத்திலும் தமிழ்முரசின் பேனாவிலும், தினமணியின் ஒலியிலும், கலையாத சித்திரமாக, குலையாத குருதியாக பதிந்து விட்டது என்பதை மறைக்கவோ மறுக்கவே முடியாது, முயற்சி முறி அடிக்கப்பட்டால், குலைக்கப்படுமானால் வருத்தமோ வாட்டமோ கொள்ளாமல் சோர்ந்து கீழேவிழாமல் சுறுசுறுப்புடன் ஆற்றும் பண்பு வேண்டும்.

மானத்தை மறைக்க மஸ்லீன் துணி தந்த மறத்தமிழா, களங்கத்தைக்களைக்க வேண்டாம்! தாயனையின் அரியணையில் ஆருயம் அமர்ந்ததே! போனதை பிடுங்க வேண்டாமா! கழிந்ததை கைப்பற்ற வேண்டாமா! பாரை ஆண்ட இனத்தவனே பறையன் புலையன். நீசன் என்ற பெயரை நீக்க வேண்டாமா! தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழகம் தாழ்ந்து விட்டதே! ஏற்றத்தோடு வாழ்ந்த தமிழகம் ஏங்கி விட்டதே! ஆற்றல் வாய்ந்த தமிழகம் அடங்கி விட்டதே! நமக்கு விடுதலை இல்லை, விமோசனம் கிடைக்காது என்று எண்ணி ஏமார்ந்து விடாதே மங்கி கிடக்கும் கண்களில் மகிழ்ச்சி ஊற்று பெருகும் நாள் கண்களுக்கு தெரிகின்றதே துன்பக்கேணியில் துவண்டு கிடக்கும் நமக்கு இன்ப ஏணி வேண்டாமா; பச்சை மாமிசத்தை உண்டு திரிந்த பரங்கியனின் பாராளும் காலம்தான் கருகிற்று. ஆனால் பாட்டாளி மக்கள் படும் துயர் நீங்கினபாடில்லையே

உள்ளம், உடைந்து, உணர்ச்சி வறண்டு, வயிறு காய்ந்து சோகத்தின் பிம்பமாக நாய் வாழ நானும் சேரிகளிலே ஓட்டைக் குடிசையிலே உயிரை கையில் பிடித்துக் கொண்டு சித்ரவதைக்கு ஆளாகி சிறுமைப்படுவதைவிட. உழைப்பின் உருவம் என உறுதொண்டு செய்ய புறப்படு. மடமைகளை மாய்க்க கொடுமைகளையே சீரழிவுகளை சிதறடிக்க தளபதி அண்ணா கூறியவிதம் மார்பில் ஈட்டி பாய்ந்த காலத்தும் மனங்கலங்காத மரவீரர்களே! தூக்கு மேடையைக் கண்டு அஞ்சி. ஓடி, ஒளியாதீர்கள் துள்ளட்டும் நமது உடல் சிந்துங்கள் இரத்தத்தை வியர்வையாக்கி சீறுகின்றன சிறு மதியினரைக் கண்டு சிரியுங்கள் உரிமையின்றி உலுத்தராக வாழ்வதா துப்பாக்கி வேட்டுகளை துச்சமெனக்கொண்டு நிலைகலங்காத தீரத்தோடு நேர்மைக்கு போராடுவோம், நாட்டின் நலிவை போக்க இன்பம் தரும் மருந்து சுயமரியாதை சூரணமே மனிதன் மனிதனாக வாழ விரும்பும் உரிமைப்போரை உதாசினம் செய்வது தமிழனுக்கு அழகா! கைலாயத்தை நோக்கும் கண்களே, கணபதிக்கு பூசை செய்து புகை மண்டலம் எழுப்பும் கரங்களே, உடலிலே ஊசிவிட்டு ஆழம் பார்க்கும் அளவுக்கு ஆணவம், அதிகாரம். பயங்கரமான மிருகத்தனம் தலைவிரித்து கூத்தாடுகின்றதே.

வேலையில்லா திண்டாட்டத்தால் வெந்து கிடக்கும் மக்கள், இருட்டறையில் நின்றல்லவா ஏங்கித்தவிக்கும் நிலைமை நமக்கு சுதந்திர சர்க்காரிலும் ஏற்பட்டுவிட்டது. குறுகிய மனப்பான்மையை அகற்றி, குதர்க்கத்தை உண்டாக்காமல். மொழி, வழி, மாகாண பிரிவினைக்காக, இருண்ட நாட்டிற்கு இரையொளி கொடுக்க. வேற்றுமையை ஒழித்து ஒற்றுமையைக் காட்ட, ஒருவனே குலம், ஒருவனே தெய்வம் என்ற கண்ட உண்மையை மீண்டும் நிலைநிறுத்த, சேல்விழி மாதர்கள் பெற்றெடுத்த சிங்கங்களே! அஞ்ச வேண்டாம். உச்சி மீது வானிடிந்து வீழினும் அச்சமில்லை, அச்சமென்பது இல்லையே என்ற பரணி முழங்கிக்கொண்டு, உச்ச நிலை அடைந்து மேன்மையுடன் விளங்கிய திராவிடம் மங்காப் புகழுடன் மறுத்த தமிழரின் மனக்கண் முன் விளங்க வேண்டுமானால் உண்மை, உழைப்பால் மலரும் நாள் வந்து விட்டது. நெய்யால் மூண்டு எழும் நெருப்பு. ஏழையின் கண்ணீர் இவைகளின் கூட்டுத்தொகையே இன்பம் நுகரும் எழில் நாளை எச்சரிக்கின்றன.

அடைக்கப்பட்ட சிறுத்தைகளே பயமென்னும் சிறைச்சாலையினின்று பகிரங்கமாக வெளிவந்து. தடிகொண்டுதாக்கினாலும், கைகோர்த்து களம். புகும் காட்சியைக் காண விரைந்து ஓடி வாருங்கள். புதிய பாதை வகுக்க சோஷியலிஸ்ட் திராவிட குடி அரசு அமைக்க திரண்டு எழுவீர். திக்கெட்டும் வாலுக்கு முத்தம் கொடுத்த வமிசத்தவர்களே! வணக்கம்.

புத்தாண்டு வாழ்த்து

—: (x) :—

மங்களம் பொங்குக! மாநிலமெங்கும்.
நங்கள் நல்நாடு நலனிறைந்தோங்குக.
திங்களஞ் செல்வியர் திருநிறைச் செல்வர்!

பங்கயில் குணத்தால் பாங்கு பெற்றோங்குக!
அடிமைத் தளையவிழ் ஆன்ற நம் நாடு!
மடிமை நீங்கி மாணலம் எய்தி!
உலகுக் கெல்லா உயர் வழிகாட்டும்!

பல பல துறைகளில் பாங்குக பெற்றோங்கு!
வழி வழி வாழ்க! வாழ்க! என்றே
இழிவழி நீங்கிய இறைவனை ஏத்துவம்
புது வது தோன்றிய புத்தாண்டின்றே!

யூ. என். அழகிரிசாமி நாயுடு
1-1-'49

60 பசுபதி முதலியார் வீதி, உடுமலைப்பேட்டை

இலக்கணப்பகுதி.

தெரியும். ஆனால்?2.....

8. வல்லினமாகிய ற் என்னும் எழுத்திற்குப்பின் க், ச், ப் ஒருபோதும் வராது,

உதாரணம்:—நிற்க்கும், பயிற்ச்சி கற்ப்பு; நிற்கும், பயிற்சி கற்பு :

9. சில சொற்களின் நடுவில் கிற, கிறு, கின்ற, கின்று என்பவை வரும் இற்றில் எப்போதும் வல்லின றகரமே வரும். இடையின ரகரம் வந்தால்தவறு.

(உ-ம்) படிக்கிர, படிக்கிரான். படிக்கின்ர, படிக்கிரான்ன்; படிக்கிற, படிக்கிருன், படிக்கின்ற படிக்சின்ருன்

10 சொல்லுக்கிடையில் ந் பெரும்பாலும் வராது. ன் தான் வரும்.

(உ-ம்) தமையந். சென்ருந். தமையன், சென்ருன்

குறிப்பு:—விதி விலக்கும்உண்டு ஆனால் தேவையில்லை.

11. சொல்லுக் கடைசியில் வல்லின ற் ஒருபோதும் வராது. இடையின ர் தான் வரும்.

(உ-ம்) தவிற், பயிற், அரசற்; தவிர், பயிர் அரசர்

12. வல்லின றகரம் தமிழ்ப் பாஷைக்கே உரியது. இடையின ர எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவானது. ஆகையால் ர கரத்தையுடைய அந்நிய பாஷைச் சொற்களைத் தமிழில் எழுதும்போது இடையின ர கரத்தை உபயோகிக்கவேண்டும்.

உ-ம் ப்றயாணம். வடமொழி அலமாறி போர்த்து கேசியம். ப்றின்சிபால்! -இங்கிலீஷ்: இவற்றில் வல்லின ற உபயோகித்தல் தவறு.

இலக்கணப்பகுதி

முக்கிய கவனிப்பு.

ஒவ்வொரு பகுதியும் மூன்று வாரங்கள் தொடர்ந்து வரும். சற்றுகவனித்து வந்தால், மிக சீக்கிரத்தில் தமிழை பிழையின்றி எழுதமுடியும் என்பது முடிவு.

—: (x) :—

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	8-1-49

மது விலக்கு 5

சிறுவர்கள் புகைபிடித்தல் 2

"குடித்தால் வரி வாங்குவோம். ஆனால் வரி வாங்குவது சரியல்ல. அதனால் நீங்கள் குடிக்கப்படாது" என்றதுதான் ஆட்சியாளரின் முடிவாயிருந்தால் அது அவ்வளவு சரியல்லவென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது வரி வேண்டியதில்லையெனச்சொல்லிவிட்டால் வரியை வலியக்கொடுப்பவரும் உண்டா? குடிப்பழக்கம் இருந்தால் வரி வாங்கித்தானாகவேண்டும். என்ற அவசியம் எப்படி ஏற்படுகிறதோ யாமறியோம். ஆதியில் கட் சாராயத்துக்கு எவ்வித வரியும் விதித்திருந்ததாகவும் தெரியவில்லை இவ்வரி, அவசியத்தின் பொருட்டும் வசதியை பயன்படுத்திவும், முக்கிய செலவுகளைக்கருதியுமே இடை நடுவில் ஏற்பட்டதாகும். அவ்வரி இது நாள் வரைக்கும் நீடித்து வந்தது எவ்வித அதிசயித்திற்குரியது மல்ல. ஆனாலும் வருவாயிற்காக மக்களைக் குடிக்கச் செய்தனர் என்ற பழிமாத்திரம் மிக்வும் தப்பான பிரசாரமாகும். குடியின் சுகமும், பழக்கமும் மனித உற்பத்தியுடன் உதித்தது என்ற அளவுக்கு ஆங்கிலேயருக்கு முன்னும் இன்னும் அவர்களுக்கு முன் எத்தனையோ ஆட்சிகளுக்கு முன்னாலும் ஏற்பட்டதென்பதும், இராமாயணம், பாரதம் முதலியவை எழுதாதற்கு முன்பே இப்பழக்கம் இருந்து வந்ததென்பதையும் அலக்ஷியப்படுத்துவதற்கில்லை. நீடூழிகாலமாக இருந்து வந்தாலும், தீய வழியென உணர்ந்தால் அதை உடனே அகற்றவேண்டியது ஆட்சியாளரின் கடமையென்பதில் சந்தேகமில்லை ஆனால் கொண்டுசெலுத்தும் முறையே மாறவேண்டுமென்று கூறுகின்றோம். எடுத்துக் கொள்ளும் முயற்சி வெற்றிபெற வேண்டுமென்பதுவே எமது ஆவல்.

குடிப்பழக்கம் கொண்டவர்களில் பல தினுசுகளும் ரகங்களும் உண்டு. அவைகளை சற்றேனும் தெரிந்து கொள்ளல் நன்று. முக்கியமாக அவசியமாகக் குடித்தேயாகவேண்டுமென்ற பழக்கமுடையவர்கள்; சிலரோ இருந்தால் குடிப்பார்கள் இல்லாவிடில் அதைப் பற்றி கவலை கொள்ளார்கள். இன்னும் சிலரோ இலவசமாகக் கிடைத்தால் குடிப்பார்களே தவிர தன் சொந்தக் காசைச் செலவழியார்கள். நான்காவதாக - மேலே சொன்னதற்கு நேர் மாறாக-கையில் காசிருந்தால் குடித்தே தீருவார்கள். கையில் காசில்லாவிட்டால் கனவிலும் நினையார்கள். பிறர் வாங்கிக்கொடுத்தாலும் அருந்தார்கள். அடுத்தபடியாக திரேகநலிவு தோன்றினால் குடிப்பார்-மற்றவேளைகளில்வேண்டியதில்லை. இன்னும் சிலர் கூட்டம் கூடின் குடிப்பர். மற்றும் சிலரோ வேன்ஞல் தன் கையிலிருந்து பணத்தைச் செலவு செய்தும் குடியார்கள். அதேசமயத்தில் குடியாமலும் இரார்கள். எவனைப்பிடித்தேனும், எவரைத்துண்டியேனும், எவரை ஏமாற்றியேனும், செய்யாத வேலை செய்தேனும் குடித்தே தீருவர். பூராக்குடிகாரர்கள் இவர்களே. இவர்களே சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆபத்தானவர்கள். இதர ரகங்களும் உண்டு.

இவ் வெல்லா ரகங்களிலும்இரு முக்கியமான பிரிவுகள். ஒன்று கடைக்குள் சென்று குடிப்பவர்கள். மற்றொன்று எந்நிலையிலும் கடைக்குள் போகாமல், பையன்கள் மூலியமாகவோ, அல்லது அதற்கென காத்துக் கொண்டிருக்கும் கூலிகள் மூலமாகவோ பெறச் செய்து சோடாக் கடைகளிலும், வெளி இடங்களிலும், காப்பிக் கிளப்புகளிலும் இரகசியமாகச்சாப்பிடும் மரியாதை இராமன்கள். அதிலேயும் இவர்கள் நினைத்த வேளையெல்லாம் அபிஷேகம் செய்து கொண்டிருக்கும் வர்க்கத்தினருமல்ல. இவர்களைக்கட்டுப்படுத்துவது ஒரு கஷ்டமுமல்ல. குடிப்பவர்கள் எவராயிருந்தாலும் கடைக்குள் சென்று கல்லாவிடம் குடிக்க வேண்டுமே தவிர எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் கொண்டுவர அனுமதிக்கலாகாது எனக் கண்டிப்பு ஏற்படுத்தலாம். சிறுவர்கள் சிறுமிகள் உள்ளே வரக்கூடாதென்றும் அவர்களுக்குக் கொடுக்கப்படாதென்றும் ஏற்படுத்தலாம். உள்ளே இருப்பதும் காணப்படுவதுமே குற்றமென ஏற்படுத்தலாம். இக்கண்டிப்பு ஏற்படுத்துகையில் மரியாதை இராமன்களாயிருந்தவர்களில் சிலர் உள்ளே போய்க் குடிக்கவும் ஏற்படாலாம். இதைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை ஆனால் சிலராவது குடிப்பழக்கத்தினின்று தப்ப இயலும். இதை அமுலுக்குக் கொண்டுவரவும் மற்றும் பல காரியங்களுக்கும் விற்பனை யாளர்களே முக்கியமானவர்கள். இவர்களை அடக்கி ஆள்வது கஷ்டமென்றால் மற்ற காரியங்கள் எதுவும் செய்யப் போவதில்லை என்றே எடுத்தவுடன் சொல்லி விடலாம். மேலும் கடைகளை ஒரு குறிப்பிட்ட வேளையில் திறந்து வைக்கும் படியாகச செய்யலாம், இதனால் குடிப்பழக்கமும் குடியும் ஒரு அளவுக்குக் குறைந்தே தீரும்-

———: (x) :———

சென்ற வாரம் சிறுவர் புகைபிடித்தல்; என்னும் தலைப்பின் கீழ் உடன் கட்டை யேரல் விபசாரம் செய்யல் இவ்விரண்டையும் பற்றி எழுதியிருந்தோம். அவைகள் என்ன யோக்கியதையில் நடந்து வருகின்றன வென்பதைப் பற்றியும் எடுத்துரைத்திருந்தோம்.

இனி 'பால்ய விவாக'த் தடைசட்டம் என்ன விதத்தில் கையாளப் படுகிறது. என்பதையும் கவனிப்போம், இச்சட்டம் அமுலாக்கும் தோரணையைப் பார்த்தால் இச்சட்டம் சட்டத்துக்காக வந்ததா? அல்லது கொண்டு வந்தவரின் பெயரை விளம்பரப் படுத்தக் கொண்டு வந்த சட்டமாக்கப்பட்டதா! என்பதே புரிந்து கொள்ள முடியாத நிலையில் தான் இருந்து வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் பெண்ணுக்கு ஒரு குறிப்பிட்ட வயதாகு முன் கல்யாணஞ் செய்யின் குற்றமாகுமென்பதேயாகும். இச்சட்டத்துடன் பெண்ணின்வயதை ரூபகாரம் செய்யும்படியான அத்தாக்ஷி பெற்ற எந்த ஆதாரங்காட்ட வேண்டுமென்றோ அல்லது வேறெந்த வித உபாயமோ ஏற்படுத்தினதாகத் தெரியவில்லை. ஆனால் மற்றொரு வரால் புகார் செய்யப்பட வேண்டுமென்பதே சட்டத்தின் ஆக்கினையென்று நினைக்கின்றோம். அதுவும் புகார் செய்பவரும் ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாகக் கட்டவேண்டுமென்பதுவும் அதில் கண்டுள்ள ஷரா என்றும் நினைக்கின்றோம். உண்மையாகவே சட்டத்தை அமுலாக்க நினைத்திருந்தால் இவ்விதிக்குக் காரணமென்ன? ஒருவருக்கு மற்றவர் பேரில் தனிப்பட்ட விரோதமோ மனத்தாங்கலோ இருந்தாலொழிய ஒரு சம்பவத்தை ஆட்சியாளரின் கவனத்துக்குக் கொண்டுவரவும், சாட்சிகளைச் சேகரிக்கவும், கோர்ட்டுக்கு நடக்க முழங்காலுக்கு எண்ணைபோட்டுக் கொள்ளவும் அவசியம் ஏற்படுவதற்கு காரணமே இல்லை. இதிலிருந்தே சட்டத்தை இயற்றியவர்கள் சட்டத்தை அமுலாக்கும் எண்ணத்துடன் புகுத்தவில்லை என்றுதானே சொல்ல ஏற்படுகிறது. இவ்வழியில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தமெல்லாம் காலத்தின்வித்தியாசத்தாலும் கல்வி வளர்ச்சியாலும், அறிவு முன்னேற்றத்தினாலுமே யல்லாது சட்டத்தின் மூலமாக என்று சொல்ல முடியுமா?

கோயிலுக்குப் பொட்டுக் கட்டிவிடும் வழக்கத்தை நிறுத்த சட்டம் ஏற்படுத்தியிருப்பதையும் நேயர்கள் அறிவார்கள். "பொட்டுக் கட்டி" விடுதல் என்பது விபசாரம் செய்ய அத்தாக்ஷிப் பத்திரம் பெறுவதேயல்லாமல் வேறொரு முக்கியத்துவமும் வாய்ந்ததல்ல.

இச்சட்டத்திலும் ஒரு அளவுக்கு நன்மை ஏற்படாமலுமில்லை. அதே சமயத்தில் இதே சட்டம் சிலரின் வாயில் மண்ணைப்போட்டு விட்டது என்பதை நாம் மறப்பதற்கில்லை. இதே சட்டத்தில் சில தீமைகளும் ஏற்பட்டு விட்டன என்று சொல்லமுற்படின் நேயர்கள் திடுக்கிடுவர். சகோதரிகள் பலர் மனந்துடிப்பர். சட்டத்தில் தாலிக் கயிற்றைக் கட்டக் கூடாது என தடை செய்யலாம் ஆனால்உடம்பை விற்கப்படாது என்பதற்கு எத்தகைய சட்டமும் இயற்ற முடியாது.

ஆதியில் இப்பழக்கம் சமூகத்துக்குள் எப்படிப் புகுந்தது என்பதை விவரிக்கத் துடங்குவது ஆற்று மணலை எண்ணும் செயலேயாகும். சற்று யோசித்துப்பார்த்தால் ஆதியில் கள்ளங்கபடின்றி அவர் வேறு. இவர் வேறு என்ற வித்தியாசமின்றி பசிக்கு உணவு என்ற அளவிலும் முறையிலுமே காரியங்கள் நடந்திருக்கும் என்பதை சற்று தீர யோசித்துப் பார்த்தால், இப்போதுள்ள சமூகம் சற்று வெட்கத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மையாகவே ஏற்படலாம் இதற்குக் காரணம் ஆண்களின் உடல் வலிவும், துணிச்சலும் துடிப்புமேயாகும். அவ்வப்போது ஏற்பட்டு வந்திருக்கும் சீர்திருத்தங்களைக் கவனித்தாலும் மேலே சொல்லி வந்ததை ஊர்ஜிதப்படுத்துவதாகும்.

ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு சீர்திருத்தமும் அது காலத்தில் சமூகத்தில் பரவியிருந்த கெடுதலை களைந்தெறியவேயாதும். அது வன்றி வேறு விதமாகக் கொள்வதும் பரிகசிக்கத் துடங்குவதும்அவ்வளவு சரியல்லவென்பதை மாத்திரம் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். ஆயினும் இதிலும் "பிரர் குழைந்தையை கிணற்றில் தள்ளி ஆழம் டார்க்கும்" கதையும் சுயநலமும் நுழைந்திருப்பதை மறுக்க முடியாது.

சுமாராக 20, முப்பது வருஷங்களுக்கு முன் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினருக்கிடையிலேதான் பொட்டுக்கட்டும் வழக்கம் இருந்து வந்ததாகச் சொல்லலாம். அதாவதுபொட்டு கட்டும் வழக்கத்தை குறித்தே பேசுகின்றோம். விபசாரத்தைப் பற்றிப் பேசவல்ல. அக்கூட்டத்தாருக்குள் அழகு பொருந்திய பெண்களைக் பொட்டு கட்டியே வந்தனர். மற்றவர்களை அவர்களுக்கு உள்ளாகவே கல்யாணஞ் செய்து கொண்டனர். பெண்களில் அழகுள்ளவர்களையும் வசீகர முகத்தோற்றமுள்ளவர்களையும் அங்க ஈனமில்லாதாரையும். பக்குவமாகா முன்னரே, சின்னஞ் சிறுவயதிலேயே கோயில்களில் கொண்டு போய் அங்குள்ள உருவத்தின் முன்நிறுத்தி, கடவுளுக்கு அர்ப்பணம் என்ற பெயரால் கழுத்தைச் சுற்றி ஒரு மஞ்சள் கயிற்ட்டு தேவதாஸி என்ற பட்டத்தையும் ஈந்து அதிலிருந்து அண்மையில் பல ஆடவர்களுடனும் கலவிகொள்ள வேண்டி, தயார்த்தினிகளும் தனிப்பட்ட பயிற்சிகளும் கொடுக்க ஈன்ற தாய் தந்தையரே ஈனத் தொழிலென கருதாமலும் குலத்திற்கே ஏற்றது என்றும் ஒரு பெரும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் குலத்தில் மற்றவரின் பெருமைக் குரியதென்றும் முற்பட்டனர் என்றால் மிகையாகாது.

(தொடரும்,)

———: (x) :———

திருப்பூரில் திராவிடக் கழகக் கூட்டம்

திருப்பூர் திராவிடக் கழகத்தின் ஆதரவில் பழைய ரேடியோ மைதானத்தில் ஒருபொதுக்கூட்டம் 26-12-48 திரு எ ஆர் சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்றது அதுசமயம் கோபி செட்டி பாளையம் திரு ஜி என் இராசு திராவிடர்நிலைஎன்பதைப் பற்றிப் பேசினர்.

உழவும் விழாவும் (பொங்கலும்)

தைத்திங்கள் பிறக்க இன்னும் சிலநாட்களே உள்ளன. பொங்கற் பெருநாளும், தமிழர் திருநாளும் தைத் திங்கள் முதல் நாளில்தான்.

பொங்கல் விழா தமிழரின் தனிப் பெருந்திருநாள். உழவர் பெருமக்களுக்கே உரித்தான உண்மைத்திருநாள். ஏர்பிடித்துப் பானர் உய்விக்கும் பாட்டாளி மக்களின் பண்டைத் தமிழ்த்திருநாள். உடல்தேய, உயிர்தேய, உருக்குலைய உழைத்த உழவர்கள் தங்கள் உழைப்பின் பலனைக்காணும் நாள் இப்பொங்கள் நன்னாள். மாரிமடிந்து வேனில் மலரும் நாள். வடதிசை சென்ற ஞாயிறு தென்திசை செல்லும் நாள் இத்தைமுதல் நாள். புத்தாடையுடுத்தி, புத்துணவுகொண்டு, புத்துணர்ச்சி கொள்ளும் நாள் இப்பொங்கள் பெருநாள். கன்னற் சாற்றைப் பருகி, கன்னித்தமிழிலே, உற்றார் உறவினருடன் உரையாடும் நாள் இத்தைத் திங்கள் முதல்நாள்.

இது வீணரின் விழாவல்ல. திருந்தா மக்கள் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகையல்ல. கருத்தற்றோர் கொண்டாடும் கார்த்திகைத் தீபமல்ல.

இன்று உலக வாழ்க்கைக்கே உறுதுணை செய்யும் இயற்கை யன்னையின் எழிற்படைப்பாம், ஞாயிறை வணக்கம் செய்யும் நாள்- ஆம், விவசாயிகளுக்கே உயிராயுள்ள கதிரவனுக்குப் புத்தரிசிப் பொங்கலிட்டு வணக்கம் செய்வர் இன்னாள். மறுநாள், அவர்கள் நண்பர்கள்- அவர்கள் தொண்டர்கள் கால் நடைகளை அகங்குளிர அலங்கரித்து ஆனந்தப்பண்ணும் பாடுவர்.

இவ்விருநாளும் எங்ஙனும் மகிழ்ச்சி, இல்லங்கள்தோறும் இன்பந்தவழும். மணங்கமழ் மஞ்சளும், வானுயர் கரும்பும், கதலியும் பிறவும் மனைகள் தோறும் மாட்சியுடன் காட்சியளிக்கும்.

இவ்வாறு தமிழருக்கே பெருமை தரும் பொங்கல் விழாவிற்குரியவரான உழவர்களின் இற்றை நிலையென்ன?

விவசாய நாடென்னும் தமிழகத்தில்-நெற்களஞ்சியமெனும் தஞ்சையைக் கொண்ட தமிழகத்தில்-காவிரியும், பெண்ணையும், பொன்னியும் புரக்கும் தமிழகத்தில், பண்ணைப் பொன்னுக்கு மாண்புடைத் தொழிலாளி உழவனின் நிலையென்ன?

பணம் படைத்த மனோகரமுதலியார, மஞ்சளொளி பரவி, மந்தமாருதம் வீசும் மாலை நேரத்திலே, மலர்தூவிய பஞ்சணையில், வஞ்சியுடன் வாஞ்சையுடன் கெஞ்சையள்ளும்கொஞ்சும்மொழியிலே குலாவுவார். அதேவேளையில், அவர் பண்ணையாள் பரந்தாமன், உருக்குலைந்த உழவன், தன் ஓட்டைக் குடிசையில் அன்பு மனைவியிடம், தேங்கிய நீரைத்தாங்கிய கண்களுடன், "எலும்பை வில்லாவளைத்து, நரம்பை நாணாக ஏற்றி, பலனெனும் குறியை நோக்கி உழைப்பெனும் அம்பை எய்தும், சரியான பலன் கிட்டவில்லையே யென்று கூறி ஏங்குவான். இதுதான் இன்றைய உழவர் பெருமக்களின் நிலை.

உணவளிக்கும் கைக்கு ஊக்கமில்லை. இல்லை ஊக்கம் காட்டப்படவில்லை. உழைப்பிற்கேற்ற ஊதியம் காணா உழவர்கள், வேறு எவ்வேலையாவது செய்து பிழைக்கலாம் என்று நகரங்களுக்கு நாடிச்செல்லும் நிலை: உழைப்பவன் உண்ணவிரதமிருக்க (இருந்தல்லவன் இல்லாமையால்) உறங்குபவன் உண்டு கொழுக்கும் நிலை.

இந்நிலை மாறவேண்டும் இன்பம் தமிழகத்தில். உழவனின் கைநோக்கி வாழும் நாம்-அவர்கள் உதவியால் பொங்கல்விழா கொண்டாடும் நாம், விருந்துண்டு, அவன் பெருமையை மேடையேறிப் பேசுவதுமட்டும் நம் கடமையல்ல. அவர்கள் வாழ்வையும், நிலையையும் மக்கள் நினைவிற்கு கொண்டு வரவேண்டும். அவர்கள் வாழ்வை வளமாக்க ஆவன செய்யவேண்டும். நஷ்ட ஈடெனும் பெயரில் உழைப்புறிஞ்சிகளுக்குக் கொடுக்கப்படும் தொகை உழப்பாளிகளின் வாழ்வுமலர உதவ வேண்டும், அதுதான் முறை. அமைச்சர்களும், பொங்கல்விழா, தமிழர்விழா கொண்டாட முற்படும் இந்நாளில், உழவர்கள் குமுறும் உள்ளத்துடன் வாழ்வது, விவசாயமே உயிராகக்கொண்ட தமிழகத்திற்குப் பெரும்மானக் கேடாகும்.

சாதிசமய வேறுபாடின்றி, அனைவரும் கொண்டாடும் இப்பொங்கல் விழாவில், உழவர்கள் நிலை உயர, வாழ்வு மலர, ஆவனசெய்ய உறுதிகொள்வோம்.

'உழவினார் கைமடங்கின் இல்லை' விழைவதூஉம் விட்டோம், என்பார்க்கும் நிலை!

என்னும் பொய்யில் புலவனின் புனிதமொழியை அரசாங்கம் மனதிற்கொண்டு பணியாற்றுமாக,

பொங்குக பொங்கல்.
வாழ்க உழவர் பெருமக்கள்,
மதி புதுவை.



உடுமலை பீரங்கி'க்குப் பொங்கல் வாழ்த்து

பாரதிதாசன்

(பஃறொடை வெண்பா)

திராவிடரின் "பொங்கல் திருநாள்" எனுங்கால்
இராத தோர் இன்பம் எழுந்திடும்என் நெஞ்சத்தில்!

* * *

எல்லாரும் பொங்கல் இனிக்க அருந்துநாள்,
நல்ல தமிழ்பாடி ஒற்றுமையை நாட்டும் நாள்,
தேவை அறிந்து திருந்துநாள், பாவையர்கள்
ஆவலில் ஆற்றும் அறத்தின் அழகை
உலகினுக்குக் காட்டி உவக்கு நாள், சீர்த்தி
இலகுநாள் இன்பத் திருநாள் நனி வாழ்க!

* * *

எல்லாரும் பொங்கல் இனிதுண்பார் அஃதேபோல்
எல்லாரும் "ஏற்க உடுமலைப் பீரங்கி"
இன்றுபோல் என்றும் திராவிடரின் ஆதரவில்
நன்றே நடை பெறுக நம் மருமைப் பீரங்கி!

* * *

இன்பத் திராவிடம் மீட்சியினை எய்திடுக!
அன்புத் திராவிடர் ஆட்சி நிலைக!
மிடி நீங்க! இன்பத் திராவிடரின் மேன்மைக்
குடியரசு வாழ்கநலங் கொண்டு.

கட்டாய இந்தி கட்டையிலே போகட்டும்!

—: (x) :—

முத்தமிழ் வளர்த்த 'மூவேந்தர் வாழ்ந்த நம் நாட்டிலே-திருக்குறளாலும், புறநானூற்றாலும் திக்கு எல்லாம் தமிழ் மரபின் சின்னம் நாட்டி, சிறப்புப் பெற்ற 'புலவர்கள், வாழ்ந்த நம் நாட்டிலே-சிலப்பதிகாரமென்னும், வீரக்கண்ணகியின் தீரவரலாற்றினைத் தீட்டிய 'இளங்கோவடிகள்' வாழ்ந்த நம் நாட்டிலே-தெள்ளுத்தமிழ் சுந்தரனார் 'மனோன்மணீயம்' வள்ளலார் 'அருட்பா' முதலியவைகள் சிந்தனைக் கோர் சுடராக விளங்கும் நம் நாட்டிலே- "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல், இனிதாவதெங்கும் காணோம்" என்று செம்மாந்து கூறிய, அமரகவி 'பாரதியார் வாழ்ந்த நம் நாட்டிலே- 'கவிமணி' 'புரட்சிக் கவி'கள் உலவும் நம் நாட்டிலே, இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கின்றனர், அவினாசிலிங்கச் சர்க்கார். ஏன்? தட்டிக் கேட்க ஆளில்லாது தம்பி சண்ட பிரசண்டமானான்' என்பது போல், ஆளிருந்தும் தட்டிக்கேட்காததால்! அவர்களை எச்சரிக்கிறோம் சிங்கத்தின் வாயில் தலையை நுழைத்துப் பார்க்க வேண்டாமென்று.

ஐயா அவினாசியாரே! மொழிகளுக்கெல்லாம் முதன்மையாக விளங்கும் நமது தமிழை-இலக்கியம் பல செறிந்த நமது இன்பத்தமிழை-கலப்பு மொழியென்றால் காரியுமிழும் நமது பைந்தமிழை ஒழித்து, 'இலக்கியம்' என்பதே இன்னதென்பதறியாத ஒரு செத்த வடமொழிக்கு ஆக்கம் தருவதா? மேலும், நமது தமிழகத்திலே, தமிழர்களிலே தமிழை நன்றாகப் பயின்றவர்கள் நூற்றுக்குப் பத்துபேர்கள் கூடத் தேறமாட்டார்களே! மிகுதியுள்ளவர்கள் தமிழை இன்னும் நன்றாக உணராதிருக்கும்போது, கையெழுத்து போடென்றால் விரல் முத்திரை இடும்போது, அவர்களுக்கு தமிழமுதை ஊட்டுவதை விடுத்து இந்தி விஷத்தைத் திணிப்பது சரியா? முறையா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

கட்டாய இந்தி கட்டையிலே போகட்டும்.
ந. வெங்கடேசன் புதுவை.

6ம் பக்கம் தொடர்ச்சி

இந்த மனுஷனை சினிமாவுக்குக் கூப்பிட்டோமென்று.

நம் நாட்டு படம் தயாரிக்கும் நிபுணர்களுக்கு வரலாறு தெரியாதோ? என்னவோ வரலாறுகளை படமாக்கிக் காட்டுவதில்லை என்று சலித்துக் கொண்டார் பிறிதொரு நண்பர்.

நிச்சயம் வரலாறுகளை படமாக்கிக் காட்டத்தான் வேண்டும் முன் வருவார்களா? நம் நாட்டு சினிமா பட உரிமையாளர்கள்.

பகுத்தறிவுக்குப் பொருத்தமான கதைகளைத் தான் படமாக்க வேண்டும். அதிலும் 15 ஆயிரம் அடிகளில் கூட தேவையில்லை. 12 ஆயிரமடிகளில் படமெடுத்தால் தான் பார்ப்பவர்களுக்கும் சலிப்பேற்படாமல் இரண்டு அல்லது இரண்டரை மணி நேரத்தில் படம் முடிவதற்கும் ஏதுவாக இருக்கும்.

இந்த சினிமாப் பட விஷயத்தில் அமைச்சர் குழுவினர் சிரத்தை எடுத்துக் கொள்வதற்கு நம் வணக்கம் அவர்களுக்கு உரித்தாகுக.

12 ஆயிரமடிகளில் படம் தயாரித்தால் போதுமென்பதே நம் தாழ்மையான கருத்து: ஏற்றுக் கொள்வார்களா? பார்ப்போம்.

வணக்கம் கலைநாதன் திருச்சி

மூளைக்கு வேலை

பகுத்தறிவுப் போர்க்களம் 2

விஷயம்:—சினிமாப் பட நீளத்தை 15000 அடிக்குமேல் இருக்கப்படாதென்றும் ஓடும் நேரம் மூன்று மணி ஆகப்படாதென்றும் சர்க்கார் அவர்கள் சட்டம் கொண்டு வருவது அவசியமா? நியாயமா?

நேயர்களின் கருத்துக்கள்

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் உரித்தாகுக.

சினிமா நேரம், அளவு முதலியன வற்றை கட்டுப்படுத்துவது நீதியா என ஆராயும் முதற்கண் சினிமா என்பது யாது என அறிதல் நன்று.

சிறுவர்கள் பள்ளி சென்று கல்வி கற்பதற்கொப்பாகும் சினிமாவின் கலை. பொழுது போக்குக்கு என்பர் ஒரு சில உல்லாசவாசிகள். எவ்வாறு இருப்பினும் அறிவுக்குப் பொறுத்தளவில் முன்னேற்ற போக்கிலே அமைந்த ஓர் கலை என்றே சொல்லலாம். படிக்காத பாமரர்கள் எளிதில் உணர்ந்து திருந்தக்கூடிய கலை. வெளிநாட்டின் வர்ணனைகளை நேரிற் காண்பன போன்ற உன்னத சித்திர கலை.

சினிமா கலை, காலம் அளவு கட்டுபடுத்துவது நல்லது. காலம் மூன்று மணியென்றும் அளவு 15000 அடி என்றும் திட்டம் திட்டினார்களேயொழிய கலையின் இலட்சணத்தை கட்டுபடுத்த மறந்து விட்டனர் அமைச்சர் குழுவினர். இருப்பினும், பிரசவத்தில் இருக்கும் திட்டத்துக்கு எமது திருத்தங்களையும் கொடுக்கிறோம் அரசியல் மண்டபவாசிகளுக்கு எடுத்து கொண்டு முழு உருவத்துடன் குழந்தை பேறு நடந்தாலும் சரி; நாம் இதை, ஜனநாயக ஆட்சியென்று கருதுவதால் ஒரு சில திருத்தங்கள் கூறுவது நியதியென எண்ணுகிறோம். நிற்க, நம் நாட்டு சினிமா கலை எங்ஙனம் அமைந்துளது என அலசி பார்ப்போம் அறிவுக்கு எட்டும் வரையில்.

தனிமையிலே நடந்து செல்லும் பெண்ணிடம் "நடையலங்காரம் கண்டேன்" என வாலிபன் பாட, அப் பெண் 'யாரடா இக்காமுகன்" என் திரும்பி பார்க்க, தன் மீது இச்சை கொண்டு திரும்பினாள் என எண்ணிய அவ்வாலிபன் "உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ" என பின் தொடர நாணங்கொண்டு அந்த இளநங்கை வெட்கி தலை குனிந்து செல்ல "ராதே உனக்கு கோபம் ஆகாதடி" என வாலிபன் மேலும் முகாரி வைக்க என் செய்வோம் என எண்ணும் அம் மங்கை நல்லாள் சற்று வேகமாக நடைபோட பின் வரும் எம்டி பாக்கெட் மைனர் 'ஓடாதே ராதே' என சற்று ஓடிவர கற்பு பலாத்காரம் செய்யப்பட்டு என்று அச்சமுறும் இளந்தளிர் மேனியாள் சற்று மலைத்துப் போய் நிற்க தன் வரவை எதிர் நோக்கி நிற்கிறாள் என எண்ணிய வாலிபன் 'ஊன்று ஒரு வார்த்தை சொல்லம்மா" என பாடி முடிக்க இறுதியாக அப்பெண் ஈன ஜென்மமெடுத்தேன் என் ஐயனே என்னை நீ ஏன் படைத்தாய் என பாடிக் கொண்டு செல்லும் நிலையில் தான் அமைந்துமிருக்கிறது. நம் நாட்டு சினிமா கலை. இந்நிலை மாற வேண்டாமா?

ஆடி பிழைக்கிறார் சின்னப்பா, பாடி பிழைக்கிறார் பாகவதர், காட்டி பிழைக்கிறாள் ராஜகுமாரி என்று உஞ்சிவிர்த்திகள் எழுதும் நிலை மாற வேண்டாமா?

கட்டழகி காஞ்சனமாலா, பொட்டழகி மங்களம், வெட்டழகி சுந்தரிபாய், இடையழகி இசையரசி சுப்புலட்மி என்று விளம்பரம் செய்து பொருள் திரட்டும் நிலை மாற வேண்டாமா?

எவ்வாறேபோய் தொலையட்டும்? அறிவுக்காவது பொறுந்தவேண்டாமா கையை காட்டினால் மலைகளும் நகரங்களும் உண்டாகின்றன வென்றும், (நெற்றிக்) கண்ணை திறந்தால் காத்தவராயன்கள் பிறக்கிறார்கள். என்றும், விளக்கைத் தேய்த்தால் பூதம் வரும் என்றும் சரடுவிடும் சாணக்கிய மந்திரங்களாக வல்லவா இருக்கின்றன!

இந்த சினிமாகலை, நமக்கும் பெருமாள் கோயில் உண்டியலுக்கும் சம்பந்தபடுத்துகிறதே யொழிய, கோயில் மணிக்கும் நமது கைகளுக்கும் சம்பந்தபடுத்துவதில்லையே இம்மட்டுமா;

தன் குழந்தையை கொன்று விருந்திட்டு பக்தி செலுத்தினான் சிறுதொண்டனென்றும் மனைவியை பிறர்க்கு அடிமைபடுத்தியேனும் ஆண்டவன் அருளை பெற்றான் அரிச்சந்திரன் என்றும் குழந்தை மீது பாசமற்று போயினும் பக்தியை மறவாதிருந்தான் சக்ரதாரி, என்றும் பிச்சையெடுப்பினும் பரந்தாமனை மறந்தானில்லை குசேலன் என்றும். அநீதி புரிந்த ஆண்டவனிடத்தும் அருளையே வேண்டினான் நீலகண்டன் என்றும், கஜானா பணத்தை செலவிட்டு சிறைவாசம் செய்யும் போதும் ராமனின் பக்தியை விட்டானில்லை ராமதாஸ் என்றும் படம் எடுக்கும் பஞ்சாங்க நிலைதானே. இவை காலத்தின் பால் மாற வேண்டாமா? இவை போதுமா இன்னும் கேளுங்கள்,

கண்ணகி என்று ஒரு படம் எடுத்து திரையிட்டனர். நீவிரும் கண்டுமிருப்பீர். இக்கதையை மேலோகத்திலே "சிவம் பெரிதா? சக்தி பெரிதா? என பார்வதியம்மையார் கேட்ட வினாவின் விளைவு என படம் எடுக்கும் எத்தர்களை என்னவென்று இயம்புவது? சிலப்பதிகாரத்திலே "சிவம் பெரிதா, சக்தி பெரிதா" என்ற எழுத்துக்களையாவது ஒன்றுசேர காட்ட இயலுமா இச் சினிமாகலை வல்லவர்கள்? மக்களை மடையர்களாக்க இப்படியா கதையை கொலை புரிவது? கேட்பார் யாருமில்லை என்ற எண்ணமா? இல்லை, கதை கட்டுபடுத்த அரசியலார்க்குத்தான் அறிவேது என்ற எண்ணமா? இவ்வளவும் மறைந்துபோக சென்ஸார் போர்டார்கள் என்ன குருடர்களா? ஆம்! அம்பிகாபதி, குபேரகுசேலா. தாராசசங்கம் கங்கணம் போன்ற படங்களை வெளியிட்ட இந்த சென்ஸார் போர்டார் நல்லதம்பியிலே என்ன குற்றம் கண்டுவிட்டார்கள்; அது அண்ணா எழுதியது என்பதை தவிற,

ஆகவே, கதையிலே கருத்தில்லை நடிப்பிலே அழகில்லை வசனத்திலே சுவையில்லை, சினிமா கலையிலே சரக்கில்லை என்ற முடிவுக்குத்தான் யாரும் வரமுடியும். இச்சினிமா கலைகளுக்கு கால அளவைமட்டும் கட்டுபடுத்தினால் பயன் தராது, கலையை முதலில் கட்டுப்படுத்த வேண்டுமென அரசியலார்களை மிகவும் பணிவன்போடு கேட்டு கொள்ளுகிறோம்.

திராவிடர் நாகரீகம், ஆரியர்களின் வருகை, வர்ணாஸ்ரம முறை, சேர, சோழ, பாண்டியன் வாழ்க்கை வரலாறு புத்த, ஜைனமதம், ஆரம்பம், நந்தர்களின் ஆட்சி அலெக்ஸாண்டர் இந்திய படையெடுப்பு மௌலிய வம்சம், அசோகர் ஆட்சி, ஹீனர்களும் இந்தியாவும் முகம்மதியர்கள் ஆட்சி வெள்ளையன் வருகை பாகிஸ்தான் ஆட்சி வடநாடும் தென்னாடும் இவ்வாறு படம் பிடித்து காட்டலாம் சினிமாகலையின் மூலமாக நெஞ்சிலே நேர்மையிருந்தால்.

ஆகவே மக்களுக்கு பயன்பட கூடிய அளவிலே அறிவிக்கு பொறுத்தமாக முன்னேற்ற போக்கிலே கதைகளுக்கு கருத்துக்கள் நீட்டும் கருத்தாளர்கள் நமக்கு தேவையே யொழிய புராணங்களுக்கு மெருகு கொடுக்க பெர்னாட்ஷாக்களை தேடும் 'ஸ்ரீரா'க்கள் தேவையில்லை.

இத்துடன் நம் நாட்டிலே எத்தனை வடநாட்டு படங்கள் ஓடுகின்றனவோ அந்த அளவு நம் நாட்டு படங்கள் வடநாட்டிலே ஓடியே தீரவேண்டுமென ஓர் கட்டுபாடு செய்ய ஆட்சியினர் முன் வரவேண்டும். முன் வருவார்களா? இனியும் பார்ப்போம்.

தங்களன்புள்ள தோழன்,
அறிவழகன்.

ஆசிரியர் வணக்கம்!

சினிமாப் படங்களின் நீளத்தையும் நேரத்தையும் கட்டுப்படுத்துவது அவசியமானதா என்றால் அது. எனக்கு அவசியமானதும் நியாயமானதும் என்று தான் தோன்றுகிறது. இப்பொழுது கட்டுப்பாடில்லாததால் சினிமா டைரக்டர்கள் படங்களின் நீளத்தை அதிகமாக எடுக்கிறார்கள். இப்படி படங்களின் நீளத்தை அதிகப்படுத்துவதால் அதற்கான நேரமும் அதிகமாகிறது சினிமா பார்க்கும் மக்கள் அதிக நேரம் படங்களை ஓட்டுவதால் அப் படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு கண் எறிச்சல் உண்டாகிறது. இதனால் மக்களுக்கு கண் சம்மந்தமான வியாதிகள் ஏற்படுகின்றன. ஆனால் ஆங்கிலப் படத்திலோ எவ்விதமான துன்பமும் ஏற்படாது. ஏனென்றால் அவர்கள் மிகவும் குறைந்த நீளத்தில் குறைந்த நேரத்தில் ஓட்டும்படியான படங்களைத்தான் தயாரிக்கிறார்கள். அதனால் இப்படங்களை பார்க்கிறவர்கள் எவ்வித கடினமின்றி காணப்படுகிறார்கள். இதனால் படங்களின் நீளத்தையும், நேரத்தையும் கட்டுப்படுத்துவது அவசியம் என்றே தோன்றுகிறது.

இங்ஙனம்.
இரா. அரங்கநாதன்.

பேரன்புடையீர்!

பணிவாய் வணக்கம்.

சிக்கலான கேள்வி சிக்கல்மட்டுமல்ல. விடை எழுத சற்று சிரமும்கூட உண்டாகும் இக்கால் சினிமாப்படத்தைப் பார்க்குங்கால்.

சினிமாப்படநீளம் பற்றி ஆராயுமுன் நம் நாட்டு சினிமாக்கள் எந்நிலையில் உள்ளன என்று ஆராயாமல் இருக்க முடிவதில்லை.

சினிமா ஓர் கலை. படிக்காத பாமர மக்கள் பார்த்துப் பகுத்தறிவு பெருவதற்காகவும் பயன் படுத்திக் கொள்வதற்காகவும் எற்படுத்தப்பட்ட ஓர் உன்னதமான கலை. அப்படிப்பட்டக் கலையைத் தான் கொலை செய்கின்றனர் குறையறிவுள்ள நம் கோமான்கள்.

நம் நாட்டு சினிமாக்கலை எந்நிலையில் உள்ளது? பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பரந்தாமனும் அவன் உந்தியிலிருந்து ஒரு கொடி கிளம்புவதாகவும் அந்த கொடியில் ஒரு மலர் மலர்ந்திருக்கும் அந்த மலரணைமீது நான்முகன் வீற்றிருப்பார் அவரது நாவிலே சரஸ்வதி குடியிருக்க அவளது கரத்திலே வீணையிருந்து ஒலிக்க அது கேட்டு நாரதர் கீதம்பாட, அதற்கேற்ப நந்தி மிருதங்கம் கொட்ட, அதுகேட்டு முக்கண்ணன் நடனம் ஆட, ஐயன் ஆடுவது கண்டு அகிலமெல்லாம் ஆனந்தக் கூத்தாட ஐயுன் ஆடிகொண்டே சென்று ஒரு புற்றை மிதிக்க அதிலேயிருந்து ஒரு கன்னி வெளிக்கிளம்ப அவளுக்குக் கணவன் இல்லாமல் ஒரு மகன் பிறக்க அவன் கானகத்தில் பாடிக்கொண்டு செல்லுகையில் ஒரு கன்னியைக்காண அவள் அவன் மீது காதல் கொள்ள காதலர் உல்லாசமாக இருக்கும்போது கன்னியின் தந்தை கண்டு மிரள உடனே அவன் இமயகிரி பர்வதத்திற்குச் சென்று ஈசனின் அருள்பெற்று கன்னியின் தந்தையைக் கொல்ல ஐயன் எழுந்தருளி ஆசீர்வதிக்க மோட்சலோகம் நோக்கி மூவர்களும் பயணத்தை தொடக்க படம் பார்க்கும் பாமர மக்களின் கருத்து சூனியமாக தாங்களும் சன்னியாசம் பூண்டால் ஆண்டவனின் அருள் கிடைக்கும் என்ற பயித்தியக்கார எண்ணம் உண்டாக இதுபோல மாலை மணி ஆறிலிருந்து இரவு மணி 4-வரை படம் பார்க்கும் போது பசி எடுக்க கொட்டகையில் விற்கும் சுண்டலை வாங்கித் தின்று பசியை அடக்க படம் முடிந்து வீடுவந்ததும் வயிற்றுவலி எடுக்க அதை வைத்தியரிடம் காட்டவேண்டிய நிலையில் தான் இன்றைய சினிமாபடங்கள் 18 ஆயிரம் 20 ஆயிரம் அடி நீளத்தில் படம் எடுக்கின்றார்களே தவிர அறிவுக்குப் பொருத்தமாக அளவுடன் எடுக்காமல் புராணப்படங்களை வருடத்திற்கு முப்பது வீதம் எடுத்துத் தள்ளுகின்றனர் நம் படம் தயாரிக்கும் பயித்தியக்கார சீமான்கள்.

அறிவுக்குப் பொருத்தமாக ஓரிரு படங்கள் வெளிவந்தாலும் அதை இருட்டடைப்பு செய்து வருகின்றனர் உன் துடையழகைக் காண துடித்தேனடிமானே என்று சிந்துப்பாடும் பத்திரிக்கை ஆசிரியர்கள்.

என் இந்த நிலை இந்த நாட்டில் மட்டும்? பதில் தேவையானால் நாமும் பக்தராகி பரந்தாமனைக்காண துவாரகாபுரிக்கு செல்லவேண்டியதுதான்.

அங்கே சென்றால் பதில் கிடைக்குமா? அடுத்து அப்பாவி ஒருவர் எழுப்பும் கேள்வி. அங்கே சென்றால் மட்டும் என்ன வாழப்போகிறது? அங்கே கண்ணன் குழல் ஊத காரிகையர் நிர்வாணமாக ஆட இராதைக்கும் சத்தியபாமைக்கும் சண்டைகள் உண்டாக இதை தீர்த்துவைக்க நாரதர் பாட முடிவில் இருவரும் சேர்ந்து கண்ணனை மட்டையால் அடிக்க பார்க்கச்சென்ற பகுத்தறிவாளன் பார்க்க சகிக்காமல் திரும்பி ஒட வேண்டிய நிலை தான் எற்படும்.

இந்தபடம் எடுக்கும் பக்தர்களுக்கு பகவான் கதையைத் தவிர வேறுபடம் எடுக்க தெரியாதா? தெரியும்! பின் என்? புராணக் குப்பைகளை படமாக எடுக்கின்றார்கள்? அங்கேதான் நாம் சிந்திக்கவேண்டும். பணத்தையே குறியாகக் கொண்டு படம் எடுக்கின்றார்கள் நம் கலியுக கண்ணன்கள்.

ஒருநாள் நன்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றேன். அவர் வீட்டில் அவர் மனைவி ஊருக்கு சென்றிருந்தார்கள். நான் நண்பரை நோக்கி என் சார் வாருங்கள் சினிமாவுக்குப் போய் வரலாம் என்றேன், அவர் மனைவி ஊரில் இல்லை. ஆகையால் வரமுடியாது என்று சொன்னார். உங்கள் மனைவி ஊரில் இல்லாவிட்டால் என்ன சார். ரொம்ப சௌகரியமாய் போச்சு, படம் முடிந்து வரும்போது அப்படியே ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்து விடலாம் என்றேன். அதற்கவர் நம் நாட்டு படங்கள் பாாக்க வேண்டுமானால், சாப்பாடுக் கட்டிக் கொண்டுப் போக வேண்டும். சாப்பாடு கட்டிக் கொண்டு போகாவிட்டால், எவன் சார் 5 மணி நேரம் பட்டினியாகக் கிடந்துச் சாவது? என்று என்னை கேலி செய்ய ஆரம்பித்து விட்டார். எனக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது எண்டா

5ம் பக்கம் பார்க்க.

மறைந்த நட்சத்திரம்

உடுமலே. எஸ். ரஸாக்

சென்னை நகரின் எல்லையையடுத்துத்தான் அந்தக் குடிசை இருந்தது. அதன் மேற்கூரை, பகலெல்லாம் பாடுபட்டும் பசி போக்க வகையின்றி பதறித் துடி துடிக்கும் பாட்டாளியின் உள்ளத்தைப்போல, காற்றில் பறந்து கொண்டிருந்தது. அக்குடிசையின் மூலையிலுள்ள ஒரு உடைந்த மேசையின்மேல் 'மினுக், மினுக்' கென்று எரியும் ஒரு அகல் விளக்கும் சில காகிதங்களும் வைக்கப்பட்டிருந்தன. அம்மேசையையடுத்து ஒரு நாற்காலி இருந்தது. அதின்மீது கையில் பேனுவுடன் உட்கார்ந்து, ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான் கோபாலன். அவனது சிந்தனை உச்சநிலையடையும் பொழுதெல்லாம் நாகத்தின் சீற்றத்தைப் போல் உஷ்ணமான பெருமூச்செறிந்து அமைதியைக் கிழிப்பான். வெள்ளையைக் கண்டு வெகு நாட்களான அந்தக் குடிசையின் சுவற்றில் கல்லூரிப்படிப்பின் போது அவனும் நிர்மலாவும் சேர்ந்து எடுத்த அந்த புகைப்படம் தொங்கிக் கொண்டிருந்தது. பொத்தல் குடிசை வழியே புகுந்த மழை நீர் அவனை விரட்டியடித்தது. கடைசி ஒரு துளி எண்ணெயின் உதவியால் ஒளி சிந்திக் கொண்டிருந்த அந்த அகல் விளக்கும் அவிந்தொழிந்தது. வறுமை வாட்ட, இயற்கை விரட்டியோட்ட வெறுப்போடு எங்கேயோ புறப்பட்டான் கோபாலன். இருளரக்கனை வெட்டி வீழ்த்துவது போல் விண்ணிடையே மின்னல்கள் கணத்திற்குக்கணம் காட்சியளித்து மறைந்தன.

கோபாலன் அவைகளைப் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் நடந்து கொண்டேயிருந்தான். மழை பொழிவதொழிந்து மங்கிய நிலவொளி மண்ணில் பரவிற்று. அவன் நடந்துகொண்டேயிருந்தான். பல பர்லாங் கற்கள் மறைந்தன. அவன் நடந்து கொண்டேயிருந்தான் - வானை முற்றுகை யிட்டுக் கொண்டிருந்த முகிற் படலமும் மறைந்து; வெண்துகிலை மண மீது போர்த்தியது போல் ஒளி சிந்திக் கொண்டிருந்தது வெண்ணிலவு. அப்போதும் அவன் நடந்து கொண்டேயிருந்தான், சிந்தனை அவனிதயத்தைச் சிதறடித்தது. வேலை தேடியலைந்த அவனது கால்கள் களைப்புற்று மேலும் நடக்க மறுத்தன- சித்தம் கலங்க பித்தனைப்போல் அவன் கடற்கரையின் அந்த மணற் பரப்பின் மேல் உட்கார்ந்து விட்டான்.

வெண்மதி தண்ணொளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. கொந்தளிக்கும் கடலினின்றும் குமுறியெழும் அலைகளைப்போல் அவனிதயக் கடலிலிருந்து சோக அலைகள் கொந்தளித்தெழுந்தன. ஹூம், ஏழைக்கு எப்பொழுதும் ஏமாற்றம் தானே? அதிலும் நான் ஓர் எழுத்தாளன். இயல்பாகவே வறுமையால் வாடும் பரம்பரையைச் சேர்ந்தவன், ஆனால் நீயோ பணக்காரி. வறுமையைப் பற்றி கனவிலும் நினைந்தறியாதவள். நான், உண்ண உணவில்லையே என்று ஏங்கித் தவிக்கும் போது நீ, உண்ட உணவு ஜீரணமாகாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பாய். நான், கட்டக் கந்தையில்லையே என்று கண்ணீர் வடிக்கும்போது நீ, காசி சில்க் புடவையைக் குறை கூறி தள்ளுவாய், நான், படுக்கப் பாய் இல்லையே என்று பதறித் துடிக்கும் போது நீ பஞ்சணையில் படுத்து நித்திரையின்றி புரண்டு கொண்டிருப்பாய்- ஒண்ட ஓட்டைக் குடிசையின்றி நான் திண்டாடிக் கொண்டிருக்கும் போது நீ, ஒன்பதாவது அடுக்கு மாடிமேல் நின்று உவகை பூத்துக் களிப்பாய்- சுருங்கக் கூறின் ஏழ்மை இறுகத்தழுவ வாழும் எனக்கும், செல்வத்திலே புரளும் உனக்கும் ஏற்பட்டது காதலா? இருக்காது, ஒருக்காலும் இருக்காது ஏன்? இதே கடற்கரையில் நீயும் நானுமாகச் சேர்ந்து எத்தனை நாட்களை இன்ப நாட்களாகக் கழித்தோம். அன்று காதலர்க்குக் களிப்பூட்டிய இக் காட்சிகள், இன்று காதலர் இதயத்தை வேதனைகுள்ளாக்குகின்றன. அன்று ஆனந்த அமுதை அள்ளிச்சொரிந்த சந்திரன் கூட இன்று அனலை வாரி வீசுகின்றானே! என் செய்வது?

பொதுநலனுக் குழைத்தேன், பொல்லாங்கு பேசி உன்னை விட்டுப் பிரித்தது இச்சமூகம். நன்றிகெட்ட நரிக்குட்டிகள் (பார்ப்பனர்) வாழும் நாடு தானே இது. இல்லையெனில், அஹிம்சையை போதித்த அண்ணல் காந்தியாருக்குப் பரிசாக மூன்று குண்டுகள் கிடைத்திருக்குமா? அதே போல், நானும், ஏ உழைப்பாளியே நீ உழைத்தும் உண்ண உணவின்றி உருக்குலைந்ததேன் என்று கேட்டேன். கேட்டதிற்குப் பதில் சிறைக்கோட்டம். ஏ சதிகார சமூகமே! இனியேனும் காதலர் வாழ்வில் குறுக்கிட்டுக் காதக வேலை செய்யாதே என்று வேண்டினேன்- வேண்டினதின் விடை சிறைக்கோட்டம். ஏ செந்தமிழ் வளநாடே! நீ யேன் சிறப்பிழந்தனை என்று கேட்டேன். கேட்டதின் பலன் சிறைக்கோட்டம், என்னருமைத் திராவிடத் தோழர்களே! பார்ப்பனரை நம்பி: பகுத்தறிவைப் பாழ் செய்யாதீர்கள் என்று பரணி பாடிய எனக்குத் தரணியில் கிடைத்த பரிசு சிறைக்கோட்டம். ஏ கல் நெஞ்சக் கசடர் வாழ் சமூகமே! கைம்பெண்கள் வடிக்கும் கண்ணீர் நச்சு நீராகமாறி உன் அஸ்தி வாரத்தை அழிக்கட்டும் என்று அறை கூவினேன். அதற்குப் பரிசு சிறைக்கோட்டம். ஏ வள்ளுவன் வாழ் வளநாடே: நீ சமயப்பூசல்களின் உறைவிடமானதேன் என்று நவின்றேன், நவின்றதின் பரிசு சிறைக்கோட்டம். ஏ தரணியாள்வோரே! தாய் மொழி காக்கும் வீரரைத் தடி கொண்டு தாக்கியதேன் என்று தாழ்வுடன் கேட்டேன். கேட்டதின் விடை சிறைக்கோட்டம். ஏ பாராளும் பக்த கோடிகளே! பைந்தமிழ் நாட்டில் பசி பசி என்று பதறும் பச்சிளங் குழந்தைகளும், பாவையருமிருக்க, பாஞ்சாலத்தில் வெருட்டப்பட்ட பனியாக்களை வரவேற்க முனைத்தீர்களே, இது நியாயமா என்று கேட்டேன். பக்த கோடி பதில் சிறைக் கோட்டம்.

அந்த ஐந்தாண்டு சிறைவாசத்தின் பயனாய் உருப்பெற்றதுதான் "காதலின் தியாகம்" என்ற அந்தக் கதை. அதைத்தான் அந்த டைரக்டர்... ஆமாம்...உன் கணவர் திரைப் படமாக்கிக் கொண்டிருக்கிறார், அதில் நீ கதாநாயகியாக நடிக்கிறாய், படம் முழுவதும் உருப்பெற்ற பின் மீண்டும் உன்னை நான் திரையில் காணுவேன், உன் அபார நடிப்பு என் பழைய சிந்தனைகளைக் கிளறிவிடும். கல்லூரி நாடகங்கள் என் மனத்திரையிலே காட்சியளிக்க ஆரம்பித்து விடும். அப்போது சிந்தனைச் சிகரத்தின் உச்சியிலே இருப்பேன் நான்,

அறை முழுவதும் எழிலொழுகும் உன் உருவமே பிரதிபலித்துக் கொண்டிருக்கும். அதைக் கண்டு தாவிப் பிடிக்க ஓடுவேன் ஆவலோடு: ஆனால் அங்கு நீ இருந்தால்தானே? காறையற்ற கற்சுவற்றில் மோதிக் கொண்டு கதறியபடியே கீழே வீழ்ந்து வறுமைப் பிணியின் வரம்பில்லாக் கொடுமையினின்றும் விடை பெற்றுக் கொள்வேன்.

மறு தினம் என் சவத்தை ஏழை உழைப்பாளிகள் உன் மாளிகைக்கு முன்னால் வருத்தம் தோய்ந்த முகத்துடன் தூக்கிச் செல்வார்கள். மாடி மேல் நின்று கொண்டிருக்கும் உன் கணவர் என் சவத்தைப் பார்த்து விடுவார். உடனே அவர் உன்னைக் கூப்பிட்டு, நிர்மலா! "காதலின் தியாகம்" என்ற கதையின் ஆசிரியன் என்று சொன்னேனே, அவன் சவம்தான் இது என்று கூறிவிட்டு, படுக்கையை நோக்கி விரைவார்.

ஐயோ! என்னுருயிரே; என்று உன் வாய் முணு முணுக்கும், உள்ளத்தில் உறைந்திருந்த சோகத்தை உடைத்து நீண்டதோர் பெருமூச்செறிவாய். கண்களில் கண்ணீரலைகள் கசிந்தோட, அதனால் உன் மார்பகம் நனையும். கற்சிலையைப்போல் என் சவம் மறையும் வரை நின்று பார்த்து விட்டு, உன் கணவனருகே சென்று, சோகத்தை மறைத்து மோகமாகப் பேசிக்கொண்டே துயில முயற்சி செய்வாய். அத்துடன் நம் காதல் முடிந்து விடும். இந்த விதமாகத்தானே மூட நம்பிக்கையால் காதற் கயிறு கத்தரிக்கப்படுகிறது இச் சதிகார சமூகத்தால்!

சிறு தூறல்கள் தூறவாரம்பித்தன. கோபாலனின் சீறி எழுந்த சிந்தனைகள் சிதைந்தன. ஓய்ந்த கால்கள் ஓட்டைக் குடிசையை நோக்கி விரைந்தன மழையில் அவன் நடந்ததால் குளிரும், காய்ச்சலும் அவனை வாட்டத் தொடங்கிற்று. பாவம்! ஏழை. அவன் முக்கினாலும், முணகினாலும் யார் கேட்கப் போகிறார்கள்? நினைவிழந்து அந்த ஓட்டைப்பாயின் மேல் சாய்ந்து விட்டான்.

பூர்ண சந்திரன் தன் முழு சோபையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். தெள்ளிய தென்றல் தெவிட்டாத மணத்துடன் தென் திசையினின்றும் கிளம்பி. மாநிலத்தோரை மட்டற்ற மகிழ்ச்சிக் குள்ளாக்கியது. ஆனால்...அதோ ஒரு உருவம், தன் மாளிகைக்கு முன்னுள்ள மலர்ப் பூங்காவின் கேணிமீது உட்கார்ந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆம், அவள் தான் நிர்மலா. இறந்த காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தாள் இவ்வுலகை மறந்து.

அம்மா! சூட்டிங்கிற்குப் போக நேரமாக வில்லையா? என்றான். அங்கு வந்து நின்ற வேலைக்கார சுப்பன். இதைக் கேட்டு திடீரென்று சிந்தனையுலகிலிருந்து விடுபட்ட நிர்மலா, தன் காரை எடுத்துக்கொண்டு ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டாள்.

மீண்டும் அவளது உள்ளக் கடலில் சிந்தனை அலைகள் மோதத் தொடங்கின. "காதலின் தியாகம்" என்ற அந்தக் கதையில் கோபாலன் எழுதிய அந்த வாசகம் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

"அடி சண்டாளி! துரோகி' அன்று இதே சந்திரனை சாட்சியாக வைத்து, என்னையன்றி வெறொருவருக்கும் மாலையிடமாட்டேன் என்று கூறினாயே அதெல்லாம் வெறும் வெளிவேஷந்தானா? காதல், காதல் என்று பிதற்றி கபட நாடகமா ஆடினாய்? 'காதல் இன்றேல் சாதல்' என்று நீ கூறிய வார்த்தைகள், உண்மையானவை, மனப்பூர்வமானவை என்று நம்பி. நான் மோசம் போனேனே! உன் காதலுக்காக என் வாழ்வையே தியாகம் செய்யவும் துணிந்தேனே!...ஹூம். உன்னைக் கூறி என்ன பயன்! என் பணக்கார வர்க்கத்தின் அகம்பாவம் உன்னை! மட்டும் விட்டு விடுமா?...இதோ பார் இறந்து கொண்டிருக்கும் இந்த ஏழையைப் பார்! பணக்காரியின்மேல் கொண்ட காதலுக்காகத் தன்னின் உயிரையும் தியாகம் செய்கின்றான். பார்! நன்றாகப்பார்! பார்த்துப் பரவசமடை!" என்று கோபால் கூறி நகைப்பது போல் தோன்றியது அவளுக்கு. தலை கிறு கிறுத்தது. உடல் வியர்த்தது. ஸ்டேரிங் பிடித்திருந்த கரங்கள் நடுங்கின. அவ்வளவு தான்; அடுத்த கணமே, சாலையின் ஓரத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின் மேல் மோதியது அவளது கார். ஐயோ! வென்றலறியபடியே கீழே சாய்ந்தாள் நிர்மலா. தலையிலும், மார்பிலும் பலமான காயங்கள் ஏற்பட்டன.

சிறிது நேரத்திற்குப் பிறகு, மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்த்தாள் நிர்மலா. சாலை ஜன சந்தடியற்றுக் காணப்பட்டது. இலேசாகத் தூறலும் தூறவாரம்பித்தது. சாலையை அடுத்து சிறிது தூரத்தில் ஒரு குடிசை இருப்பது அவளுக்குத் தெரிந்தது, எழுந்து அந்தக் குடிசைக்குச் செல்லலாமென எண்ணி நடந்தாள்...... இல்லை தவழ்ந்துகொண்டே அக்குடிசையை அடைந்தாள்.

அங்கே, நிர்மலா! நிர்மலா!! என்று முணு முணுத்துக் கொண்டிருந்தான் கோபாலன். ஐயோ! என்னன்பே; என்று அவனை ஆவலோடு அணைத்துக் கொண்டாள் நிர்மலா. அவனது முகத்தில் வெற்றியின் சின்னம் பிரதிபலித்தது. நிர்மலா! என்று கூறி, எழுந்தி

8-ம் பக்கம் பார்க்க

அறிஞர்களின் எழுத்தோவியம் நிறைந்தது
2-வது ஆண்டு பொங்கல் மலர் வெளிவருகிறது
"கோவை முரசு"
(சிறந்த மாதப்பத்திரிகை)
பொங்கல் மலர் தனிப்பிரதி 0—8—0
ஆண்டுச்சந்தா, ரூ. 3—0—0 தனிப்பிரதி 0—4—0
மாதிரிக்காப்பி விரும்புவோர் தபால் ஸ்டாம்பு அனுப்பவும்
மானேஜர்
"கோவை முரசு" நிலயம்
சூலூர் P. O.
(கோவை ஜில்லா)

தொடர் கதை

லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

——: (க) :——

[முன்வாரத் தொடர்ச்சி]

["பிவியார்"]

தங்கம்மாளுடன் கழித்த தூயக் காதல், இரவுகளை நினைத்துக்கொண்டு மனம் பொருமுவான் காமாட்சிநாதன்; தனிமையிலே அடுக்களை மூலையிலே மேல் துண்டை விரித்துப் போட்டுப் படுத்து கண்ணீர் பெருக்கியபடி. அழுதென்ன செய்வது? கதறி என்ன செய்வது? பணத்தாசையால் கழுத்தைக் கொடுத்தாகிவிட்டது செக்கிலே. இனி உலக்கை நசுக்குமே என்று பயப்பட்டால் ஆகப்போவதென்ன? விவாகரத்து என்று அவன் துணிந்து வஞ்சிபாயைக் கேட்கவோ வாய் வரவில்லை- பரம்பரை வீட்டை விட்டு ஓடிவிடவும் அவனுக்கு மனம் வரவில்லை, தலைவலிக்கு மருந்து தேடப் போய் திருகுவலியைத் தேடிக்கொண்டோமே என்று பிரலாபித்தான். இந்த மனநோய் உடல் நோயாக மாறிற்று. வைத்திய அம்மாளுக்கு இப்போது இவன் மீது அக்கரை என் ஏற்படும்? மருந்தை என் செலவிடுவார்?

காமாட்சி நாதன் படுக்கையில் படுத்தும் டாக் ஓர் அம்மாளும் வீட்டுக்கு வருவதை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு, இரண்டு மூன்று மாதங்களில் காமாட்சி நாதனை பழைய ஆநாதவு நிலைமையிலேயே நோய் படுக்கையில் விட்டுவிட்டு சென்று விட்டாள் வேறிடம் தேடி, எத்தனையோ பணக்கார கைகள் வலியவந்து கையை நீட்டிப் பணத்தைக் கொட்டி கொடுக்கும் போது கிழடுதட்டிய காமாட்சி நாதனைப் பற்றி அவளுக்கென்ன அக்கரை வீட்டிலே செய்த பலகாரம் சுத்தமானதும், உடலுக்கு உறுதி தருவதும், பலகாரக் கடைகளிலே விற்கும் பலகாரங்கள் கண்ணுக்கு இன்பம். ஆனால் உடலுக்கோ துன்பத்தைக் கொண்டு வந்து சேர்த்து விடும் விரைவில் அப்பழுக்கற்ற காதல் அமுதான தங்கம்மாளை விடுத்து கடைப்பலகாரமான பிற பெண்களைத் தேடித்திரிந்து பற்பல இன்பமும் மகிழ்ச்சியும் கண்டான் காமாட்சிநாதன் இதனால் மேல்பகட்டற்ற தங்கம்மாளின் காதல் வாழ்க்கை புளித்தது; கசந்தது வெறுத்தது. வேண்டாத பணியாரத்தை விட்டெறிந்தான் மனஸ்தாபம்; சச்சரவு,கொடுமை சித்திரவதை என்ற குப்பைமேட்டில் இந்த நாற்றக் குப்பையிலே கிடந்து நாறியலைய தங்கம்மாள் மனம் ஒருப்படவில்லை துணிந்து இத்துன்பச் சிறையை விட்டு வெளியேகினாள். விட்டது சனியன் என்றுதான் முதலில்பட்டது காமாட்சிக்கு, புதிய உருப்படி கைபடாத கனி கிடைக்குமென்ற வீணாசையால், அந்த ஆசையில்மண்ணை அள்ளிப் போட்டது ஊராரின் வசைமாரி தவறை உணர்ந்தான் மனம் வெதும்பினான். மனம் நொடிந்தது. நோய்பட்டாள் தங்கம்மாள் மாசுபடாத தங்கம் என்பதை நிரூபிக்க வந்தவள் போல் வந்தடைந்தாள் வஞ்சிபாய். டாக்டர் பரீட்சையிலே தேர்ந்தவள் மாத்திரமல்லாமல் காமப் பரீட்சையிலும் அனுபவப்பட்டுத் தேர்ச்சிபெற்றவள் புகழும் பணமும் அடையஅத்தகைய தியாகமும் செய்யத் துணிவும் பழக்கமும். உடையவள். அவள்தான் ஆசைக் கோபுரத்தின்மேல் ஏரத்துதந்த ஏணி காமாட்சி நாதன்தான் என்பதைக்கண்டறிந்தாள் காதல் வலை வீசினாள். வெற்றி பெற்றாள். காதல் வேட்டையில், தொழில் வேட்டையில், பணவேட்டையில் தன்னை செல்வத்தின் செல்வாக்கின் உச்சிக்கு ஏற்றி வைத்த ஏணி இனி தேவையில்லை என்று கண்டதும் வஞ்சிபாய், உதைத்து தள்ளினாள், தன்னை ஏற்றிவைத்த அதே ஏணியை காமாட்சி நாதனை அந்தஏணியோ விழுந்த அடியால் அதிர்ச்சியால் சின்னா பின்னப் பட்டுக் குப்பையோடு குப்பையாகக் கிடக்கலாயிற்று இதுதான் உலகம் !!!

அத்தியாயம் 5

ரயில் நிலையத்திலே குப்பையிலும் மண்ணிலும் கிடந்தது சில, இரவு முன் தங்கம்மாளின் உடல் இன்றோ, அம்சதூளிகா மஞ்சத்திலே பட்டும் பஞ்சு மெத்தையிலே மஸ்லின் விரிப்பிலே படுத்து இன்பத்துயில் கொண்டது. கடந்த சில மாதங்களாகப்பட்ட அனுபவங்களுக்கும் இன்று அனுபவிக்கும் இன்பம், ஆனந்தம், சுகம் மண்ணுக்கும் பொன்னுக்கும் போலத்தான் வித்தியாசப்பட்டன. "இது நினைவா? கற்பனையின் பித்தமோ? நீடிக்கக் கூடியதா? எதற்காக இந்த உபசாரங்கள்? பாராட்டுதல்கள்? புகழ் மாலைகள்? முகஸ்துதிகள்" என்று எண்ணி இரவை இன்பத்துயிலிலே கடத்தினாள்.

விடிந்ததும் ஆகாசவாணி இன்ப கீதம் பள்ளியெழுச்சி பாடகண் விழித்தாள். ஒரு குமரன் கையில் காப்பியைவைத்துக்கொண்டு சிங்காரமாக நின்றுக்கொண்டிருந்தாள், அடக்க மொடுக்கத்துடன் ஒரு வாலிபன் தன் படுக்கைக்குப் பக்கத்தில் நிற்பதைக்கண்டதும் தங்கம்மாள் முதலில் திடுக்குற்றாள். பரபரப்பாக மேல்சால்வையை இழுத்துப் போத்திக் கொண்டாள். "என்ன இது? இந்த நேரத்தில் கேட்காமல் கொள்ளாமல் எங்கே வந்தாய்?" என்று மிடுக்காகக் கேட்டாள்.

": காப்பி" என்றான் பயபக்தியுடன் "காப்பியாணசை பல்லைவிளக்காமல் படுத்த படுக் கைவிட்டெழுந்திருக்காததற்குமுன் காப்பி யார்கேட்டார்கள் !" சே ! போ வெளியே மரியாதை தெரியாத அசடே" என்று எரிந்து விழுந்தாள்.

அதே சமயத்தில் படுக்கையின் தலைமாட்டிலிருந்த ஒரு சிறு கதவைத் திறந்துகொண்டு உள்ளேவந்த டைரக்டர் டொண்டுராவ் அவுட்டுச்சிரிப்பு சிரித்தபடி. "இது பெட்காப்பி. படுக்கையில் இருந்தபடிதான் குடிப்பது வழக்கம். கண் விழித்ததும் குடித்தால் உடலுக்குத் தெம்பாகவிருக்கும். காப்பி வேண்டாமென்றால் குளிர் பானம் ஏதாவது வேண்டுமானாலும் கொண்டுவரச் செய்கிறேன்" என்று உபசாரமொழி கூறினார். தான் அலங்கோல நிலைமையிலிருக்கும்போது தன்னைவிட வயதான ஆண் கொஞ்சமும் தயக்கமும் ஒரு மரியாதையின்றி நெடுமரம்போல் வந்து நிற்பதைக்கண்டு தங்கம்மாளுக்கு உயிரே போய்விடும் போலாய்விட்டது. வெட்கமும் துக்கமும் பொத்திக்கொண்டுவந்தன. திகிலும் கலக்கமும் அலையலையாக எழுந்தன. பலியிடப்போகிறோம் என்ற உண்மையை பலிபீடத்திலே நிறுத்தப்பட்டவள் உணர்ந்துகொண்டால் எப்படியிருக்கும் அவள் மனநிலைமை.? இது புனிதக்கலைக் கோட்டமல்ல. காமக்கோட்டம் என்றவுணர்ச்சி ஏற்பட்டதும் அவள் உடல் கிரு கிருவென்று நடுங்கலாயிற்று. அவள் முகத்தில் பிரதிபலித்த திகிலையும் கவலையையும் கண்டான் டைரக்டர். இது அனுபவமில்லாத புதுவுருப்படி இதனால்தான்மிரள்கிறது எனபதையும் உணர்ந்தான். முதல் எடுப்பிலேயே தன் அதிகார சக்தியைக்காட்டினால் தன் நோக்கம் மணல் கோட்டையாகிவிடும் என்று குள்ளநரியான டைரக்டருக்குத் தெரியாமல் போகுமா முதலாளி வருவதற்கு முன்னர் தான் முந்திக்கொண்டு முன் அச்சக்காரம் போட்டுவைக்கவேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டுத்தான் இந்த அதிகாலையில் ஓடிவந்தார், ஆனால்தான் எதிர்பார்த்தபடி ஆள் சரணமாகவில்லை என்பதை உணர்ந்தான். சில நாள் ஆவகாசம் தந்தபின்னர் வலைவீசலாம் என்று தீர்மானித்து "நான் முன் எச்சரிக்கையின்றி திடீரென வந்ததற்காக நீங்கள் ஆயாசப்படலாகாது இது சமத்துவக்கோயில். மேலும் ஷூட்டிங்கை துரிதமாக நடத்தவேண்டியிருப்பதால் ரிஹர்சல் விஷயமாக தங்களிடம் தெரிவித்து செல்லலாமென்றுதான் இவ்வளவு அவசரமாக வந்தேன். நீங்கள் இன்னும் படுக்கையில் இருப்பதாகத் தெரிந்திருந்தால் உள்ளேயே காலெடுத்து வைத்திருக்கமாட்டேன். எதற்கும் கொஞ்சம் சீக்கிரம் உடைமாற்றிக்கொண்டு வந்தால் நல்லது உங்களுக்காகப் பக்கத்து அறையில் காத்திருக்கிறேன்."

என்று சொல்லி, சால்வைக்குள் மறைந்திருக்கும் அந்த அழகிய உடலின்மீது தனது கண்களை ஒருமுறை பாய்ச்சிவிட்டு மெதுவாக அங்கிருந்து அகன்றான் டைரக்டர் சென்றதும் தங்கம்மாள் பரபரப்புடன் எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு வேறுடை மாற்றிக்கொண்டிருக்கும்போதே "ஹலோ குட்மார்னிங் மிஸ் டங்கம்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தார். முதலாளி முத்தண்ணா. அவருடைய வரவை முன்னறிவிப்பு செய்வதுபோல் சாராய நெடி குப்பென்று அந்த அறை எங்கும் பரவிற்று தங்கம்மாளும் திடுக்கிற்றுத் தன் ஆடையைச் சரிசெய்துக் கொண்டு நின்றாள்." இராத்திரி நன்றாகத் தூங்கினீரா?

7-ம் பக்கம் தொடர்ச்சி

உட்கார முயன்றான் முடியவில்லை. அவனது நாடி பலமாக அடித்துக் கொண்டிருந்தது.

கடுங்காற்று குடிசையோடு போராடத் தொடங்கியது. நீல வானிலே கரு முகிற்குழாம் காட்சியளித்தது. "பளிச் பளிச்" என்று வானைப் பிளந்தன மின்னல்கள், பேரிடி அண்டமதிரும்படி முழங்கிற்று. விண்ணையும். மண்ணையும் ஒன்றாக இணைத்தது மழைநீர் நெடுநேரமாகக் காற்றுடன் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த கூரை இப்போது ஓய்ந்து குடிசைக் குள்ளிருந்த அந்தக் காதலர் மேல் சாய்ந்தது ஐயோ வென்ற ஒரு ஒலி. அத்துடன் அங்கு கோர அமைதி நிலவியது.

மறுநாள் சினிமாவில் பிரகாசித்துக் கொண்டிருந்த நக்ஷத்திரங்களிலே ஒன்று குறைந்தது. ஆனால் அதற்குப் பதிலாக நீல வானிலே பிரகாசித்துக் கொண்டிருந்த நட்சத்திரங்களிலே இரண்டு அதிகமாயின.

டெலிபோன் : 86729.

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

உடுமலை பீரங்கி

சந்தா விவரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

வரப்பெற்றோம்

கேலண்டரும் டைரியும்

நேஷனல் பேக்டரி அண்டு ரெஸ்டாரண்டு

மௌண்ட் ரோடு சென்னை

டெலிபோன் 86043

பிராஞ்சு:—வேப்பேரி ஹைரோடு.

கேலண்டர்

சி. எஸ். அண்டு கம்பெனி ஸ்டேஷனரி மெர்ச்சன்ட்

57, அன்டர்ஸன் தெருவு, சென்னை 1

Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2.
Jt: Editor; PIVI AR.